பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 06 புதன்கிழமை (22.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 329

# தமிழகத்து உறவுகளின் ஆதரவுக் குரல்கள் தமிழீழ விடுதலைக்கு நிச்சயம் பலம் சேர்க்கும்

## தலைவர் பிரபாகரன் 'நக்கீரன்' இதழுக்கு செவ்வி

"தமிழகத்து உறவுகளின் ஆதரவுக் குரல்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு நிச்சயம் பலம் சேர்க்கும். எத்தனை நாடுகளிடம் இருந்து உதவிகளைப் பெற்று ஸ்ரீ லங்கா அரசு யுத்தத்தைத் தொடுத்தாலும், தமிழகம் உட்பட உலகத் தமிழர்களின் ஆதரவு இருக்கும் வரை தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தோற்கடிக்க முடியாது" இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தெரிவித்திருக்கிறார்.

தமிழகத்திலிருந்து வெளிவரும் 'நக்கீரன்' சஞ்சிகைக்கு தலைவர் பிரபாகரன் ஈ-மெயில் மூலம் பேட்டியளித்தார் என்று அந்த சஞ்சிகை தெரிவித்துள்ளது.

தலைவர் பிரபாகரனின் செவ்வியை 'நக்கீரன்' நேற்று வெளியிட்டது. அதில் பிரபாகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(செவ்வியை முழுமையாக 14 ஆம் பக்கத்தில் படியுங்கள்)



# யுத்தத்தை நிறுத்துமாறு இந்தியா எந்த அழுத்தமும் தரவில்லை



## இலங்கையின் நடவடிக்கைகளுக்கு நல்ல ஒத்துழைப்புத் தருவதாகக் கூறுகிறார் அமைச்சர்

கொழும்பு, ஒக்ரோபர் 22

புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்டு வரும் யுத்தத்தை நிறுத்துமாறு இந்தியா இலங்கைக்கு இதுவரை எந்த அழுத்தத்தையும் கொடுக்கவேயில்லை என்று இலங்கை அரசு நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தது.

இறைமையைப் பாதுகாப்பதற்கும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கும் இலங்கை அரசு மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும் இந்தியா இப்போதும் நல்ல ஒத்துழைப்பு வழங்குகிறது என்று வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய நாடாளுமன்றில் ஈழ விவகாரத்தால் அமளி! இரண்டு சபைகளும் ஒத்திவைக்கப்பட்டன!!

கொழும்பு, ஒக்.22

இலங்கைப்பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்றத்தில் தி.மு.க எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை நேற்றுப் பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையில் தி.மு.க உறுப்பினர்கள் கைகளில் பதாகைகளை ஏந்தியபடி கோஷங்கள் எழுப்பியதைத் தொடர்ந்து ஏற்பட்ட அமளி காரணமாக மாநிலங்களவையும் ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை கூடியதும், மத்தியில் ஆளுங் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் முக்கிய அங்கம் வகிக்கும் தி.மு.கவைச் சேர்ந்த எம்.பி.க்கள் இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படும் பிரச்சினையை எழுப்பினார்கள்.

அப்போது இடதுசாரி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் குறித்த பிரச்சினையை எழுப்பினார்கள். மேலும் சிலர் மகாராஷ்டிராவில் வட இந்தியர்கள் மீதான தாக்குதல் பிரச்சினையை எழுப்பினார்கள்.இதனால் (16 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகம் முழுவதும் கடும் மழை; மனிதச் சங்கிலி ஒத்திவைப்பு

சென்னை, ஒக். 22

இலங்கைப் பிரச்சினை தொடர்பாகத் தமிழகத்தில் நேற்று நடைபெறுவதாக இருந்த மனிதச் சங்கிலிப் போராட்டம் மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சென்னை உட்பட தமிழகத்தின் பல பகுதிகளில் இடைவிடாமல் பெய்துவரும் கடும் (16 ஆம் பக்கம் பார்க்க)

**நாளைய உதயனில்**

க.பொ.த. சாதாரண பரீட்சைக்குரிய
கணிதம் - மாதிரி வினாத்தாள்
பிரபல கணித ஆசிரியர்
சோ.கிருஷ்ணதாஸ் (யாழ். இந்துக் கல்லூரி)
தயாரித்து அளிப்பது

# தமிழகப் போராட்டங்கள் குறித்து இங்கும் நாடாளுமன்றில் வாய்த்தர்க்கமும் சர்ச்சையும்

கொழும்பு, ஒக்.22

இலங்கை யுத்தம் குறித்து தமிழ் நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் அரசியல் போராட்டங்கள் தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் கடும் சர்ச்சையும், வாக்குவாதமும் ஏற்பட்டன.

இது தொடர்பில் எதிர்க்கட்சி எம்.பிக்களும் அரச தரப்பினரும் கடும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் சபாநாயகர் தலைமையில் கூடியது. கேள்வி - பதில் நேரம் முடிவடைந்ததும் மேற்படி சர்ச்சையை எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோஸப் மைக்கல் பெரேரா துவக்கிவைத்தார்.

இலங்கையில் இடம்பெற்றுவரும் யுத்தத்தை நிறுத்துமாறு இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுத்துவருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (16 ஆம் பக்கம் பார்க்க)

# புலமைப் பரிசில் பரீட்சை மதிப்பீட்டை ஆட்சேபித்து யாழ்.பெற்றோர் வழக்கு

## உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுத்தாக்கல்

கொழும்பு, ஒக. 22

கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற ஐந்தாம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையின் வினாத்தாள் மதிப்பீட்டுப் பணியில் இடம்பெற்ற குளறுபடிகளால் யாழ்.மாவட்ட மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்து, அதற்கு நிவாரணம் கோரி, யாழ்.மாவட்ட மாணவர்கள் பத்துப்பேரின் பெற்றோர்கள் கொழும்பில் உயர் நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாக பரீட்சை ஆணை [illegible] திபர் ஆகி [illegible] பெயர்கள் (16 ஆம் பக்கம் பார்க்க)

# மாகாணசபைகளிடம் உள்ள அதிகாரங்களை மத்திய அரசின் கீழ் கொண்டுவர சதித்திட்டம்

## அம்பலப்படுத்துகின்றார் சுரேஷ் எம்.பி.

கொழும்பு, ஒக். 22

13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை மீளப்பெற்று மத்திய அரசின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டு வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டினார். (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாவளி கொண்டாட்டத்தை முன்னிட்டு
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க!
அதிரடி விலைக்கழிவுகளுடன்
உள்நாட்டு வெளிநாடுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை
யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
FedEx Express
5% தொடக்கம் 20% வரையான விசேட கழிவு
உள்நாடு, வெளிநாடுகளுக்கு
கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள்,
உணவுப் பொருள்கள், உடுபுடவைகள்
மற்றும் VDO பிரதிகள், CD க்கள்
என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு
3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு
750/= ரூபா வீதமும்.
கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத
1Kgபொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.
திருமுருகன் கொம் நெற்

# நன்றி நவிலல்

## திருமதி நடராசா இராசம்மா



19.09.2008 அன்று சிவபதமடைந்தஎமது குடும்பஒளிவிளக்காகிய நடராசா இராசம்மா அவர்களின் இறைபதம் அடைந்த செய்தி கேட்டுஇறுதிக்கிரியைகளில்நேரடியாகக் கலந்துகொண்டோருக்கும் வெளியூர்களில் இருந்து தொலைபேசி , தபால் , தந்தி மூலமும், அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும் மற்றும் வேறு பலவழிகளில் உதவி புரிந்து ஒத்துழைப்புவழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், மற்றும் 19.10.2008 அன்று நடைபெற்றவீட்டுக்கிருத்திய கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றி களை தெரிந்து கொள்கிறோம்.

வட்டு. கிழக்கு,
சித்தன்கேணி.

(79405)

தகவல்:
குடும்பத்தினர்.

BOC ATM

யாழ். குடாநாட்டில் இலங்கை வங்கியின் புதியதோர் பரிணாம வளர்ச்சி
இதோ! தேசத்தின் வங்கியாம் இலங்கை வங்கி
ATM வசதியை உங்களுக்கு அர்ப்பணமாக்குகின்றது.



தன்னியக்க கொடுக்கல் வாங்கல் இயந்திரம் (ATM) மூலம் பணம் பெறும் வசதியை அறிமுகமாக்குகிறோம்.

★ இரு நாள்கள் 4 கிளைகளில் ஆரம்பம்.
★ எமது வங்கிச்சேவை உங்கள் விரல் நுனிகளில்.
★ நினைத்த நொடியில் பணம்.
★ நீண்ட வரிசை தேவையில்லை.
★ 24 மணி நேரமும் தேவைக்கேற்ப பணம் பெறும் வசதி.
★ உங்கள் கணக்கு நிலுவையை அறியவும் மற்றும் பல பரிமாற்றங்களைச் செய்யவும் வசதி.

| கிளை | காலம் | நேரம் |
|---|---|---|
| 1.மானிப்பாய் | 22.10.2008 (புதன்) | 10.0J (மு.ப.) |
| 2.சுன்னாகம் | 22.10.2008 (புதன்) | 12.00 (பி.ப.) |
| 3.பருத்தித்துறை | 23.10.2008(வியாழன்) | 09.00 (மு.ப.) |
| 4.நெல்லியடி | 23.10.2008(வியாழன்) | 11.00 (மு.ப.) |

மேற்படி சேவை இலங்கை வங்கி வடபிராந்திய
உதவிப்பொது முகாமையாளர் உயர் திரு B.A. அருமைநாயகம்
அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

செயற்பாட்டு முகாமையாளர்,
உதவிப்பொது முகாமையாளர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-555611)

# குடாநாட்டில் அடை மழை

யாழ்ப்பாணம், ஒக்.22

குடாநாட்டில் பரவலாக நேற்றிரவு முதல் அடை மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது.

நேற்று இரவு 9 மணி முதல் தொடர்ந்த இந்த மழை காரணமாக தாழ்ந்த பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

வன்னியில் தொடரும் மழை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் பெரும் அவலங்களை எதிர்நோக்கியுள்ளனர் எனத் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இலங்கை வங்கி சுன்னாகம் கிளையில் இன்று தன்னியக்க இயந்திரம் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22

இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளையில் தன்னியக்க கொடுக்கல் வாங்கல் இயந்திரம் (ATM) வைபவ ரீதியாக இன்று நண்பகல் 12 மணிக்கு திறக்கப்படவுள்ளது.

இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் இந்தச் சேவையை வைபவ ரீதியாக திறந்து வைப்பார்.

அதனைத் தொடர்ந்து விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

(சிறப்பிதழ் 11 ஆம் பக்கத்தில்)

# பேராசிரியர் மகேஸ்வரன் நினைவுப் பேருரை நாளை

யாழ்ப்பாணம், ஒக்.22

அமரர் பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரனின் நினைவுப் பேருரை நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் 'இரசாயனப் புற்றுநோய் உருவாக்கமும் யாழ். குடாநாட்டில் அதன் சாத்தியமான தாக்கங்களும்' என்னும் தலைப்பில் யாழ். வைத்தியசாலை புற்றுநோய் நிபுணர் வைத்திய கலாநிதி என். ஜெயக்குமாரன் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். (201)

# கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.22

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட அனுசரணையுடன் வேலணைப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட புங்குடுதீவு பெருங்காடு தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் மாபெரும் தையல், பொம்மை கண்காட்சி விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத்தின் தலைவர் செல்வி க.புஸ்பமணி தலைமையில் நடைபெறும் விழாவில் பிரதம விருந்தினராக வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் யாழ். அலுவலகப் பொறுப்பதிகாரி கே.வி.நிஷாந்தன், வேலணைப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மீரா திசநாயகம் பிள்ளை, வட இலங்கை சர்வோதய அறங் காவலர் செல்வி பொன். ஜமுனாதேவி, வேலணைப் பிரதேச பதில் கிராம அபி விருத்தி உத்தியோகத்தர் ந.செல்வச்சந்திரன், புங்குடுதீவு மத்தி ஜே/ 29,30 கிராம அலுவலர் மேற்படி சங்கத்தின் ஓய்வு பெற்ற முன்னாள் தலைவி [illegible] ஆகியோர் கலந்துகொள்வர்.

# யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.கா வித்தியாலயம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2008ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 100 புள்ளிகளுக்குமேல் எடுத்த மாணவர்களையும், அவர்களுக்குப் பயிற்றுவித்த வகுப்பாசிரியர் திரு.சி.ஞானகுமாரன் அவர்களையும் மற்றும் ஏனைய பாட ஆசிரியர்களையும் இவர்களை வழிப்படுத்திய பாடசாலை அதிபர், தென்மராட்சிக் கல்விவலய உத்தியோகத்தர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| 1)க.லக்ஷி | - 144 | 5)ம.அஜித் | - 114 |
| 2)சி.இளங்குமரன் | - 131 | 6)ஜெ.பாதுசாளினி | - 110 |
| 3)பு.மிதுலன் | - 119 | 7)த.பிரதா | - 100 |
| 4)செ.சுபேதிகா | - 117 | | |

பாடசாலைச் சமூகம்,
யா/கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.

(79399)

# மரண அறிவித்தல்கள்



## ஆங்கமம் வேலுப்பிள்ளை குமாரசாமி

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஆங்கமம் வேலுப்பிள்ளை குமாரசாமி அவர்கள் 19.10.2008 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தர் வேலுப்பிள்ளை - சின்னாச்சி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற மாரிமுத்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நமசிவாயம் நாகம்மா, கணேசபிள்ளை அன்னமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும் நிவாசன், ஆறுமுகம், கணேசன், கமலவேணி, கருணாகரன், மகேஸ்வரி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் நிமலாவதி, சிவநாயகி, ஆனந்தராசா, கமலா, இரத்தினசிங்கம், பாலரஞ்ஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிமன்யு, கார்த்திகா, யுதாமன்யு, திவாகர், சூர்யா, அனுசியா, உமேஸ், தினேஸ், குகனேஸ், இந்துஜா, கனுஷன், கனுசியா, பிரியதர்சினி, ரஜீவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.10.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு லண்டனில் உள்ள HENDON CREMETORIUM, HOLDERS HILL ROAD, LONDON, NW7 1NB இல் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :

பலகாடு,
காரைநகர்.

குமாரசாமி ஆறுமுகம் - 07523670267
குமாரசாமி கணேசன் - 07590688299
குமாரசாமி விக்கினேஸ்வரன் - 07776303739

(சி/555639)

## ஜேசுதாசன் தெய்வேந்திரராஜ்

*(கொலின்)*



யாழ்ப்பாணம் டேவிற் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட ஜேசுதாசன் தெய்வேந்திரராஜ் (19.10.2008) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான ஜேசுதாசன் (முன்னாள் விலைக்கட்டுப்பாட்டுப் பொறுப்பதிகாரி) ராணி தம்பதியரின் அன்பு மகனும் திரு. திருமதி ஜேசுதாசன்-றீற்றா தம்பதியரின் அருமை மருமகனும் லக்சியின் அன்புக் கணவரும், ஜெஷான், ஜொவானா ஆகியோரின் பாசமிகு தந்தையும் றூபா, நிர்மலராஜ் (றொபின்), பேளி, யூயின் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.10.2008 லண்டனில் நடைபெறும்.

தகவல்:
றூபா ஆஸ்லி தர்மநாயகம்
0112945563 றூபா
021 4590837 றொபின்
00442082011980 லக்ஷி

(சி/555638)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஏற்றுமதி வரிச்சலுகை இழப்பால் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பு

தகவல், தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞானத் துறைகளின் இராட்சத வேக - அபரிமிதமான - வளர்ச்சி காரணமாக உலகப் பந்து இன்று 'பூகோளக் கிராமமாக' சுருங்கிவிட்டது.

ஆனால் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் - அல்லது புரிந்தும் கூட அந்த உண்மையை உள்வாங்கிக்கொள்ள விருப்பமில்லாமல் - இன்னும் 'மன்னர் ஆட்சிக் கால இறைமையை' தக்கவைத்துக் கொண்டிருப்பதான மிதப்போடு நடந்து கொள்கின்றது கொழும்பு அரச நிர்வாகம்.

அதன் வெளிப்பாடுகளை - விளைவுகளை - சர்வதேச ரீதியில் பெரும் நெருக்குதல்களாக - நெருக்கடிகளாக - எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குள் நாடு தள்ளப்பட்டிருக்கின்றது.

அதில் ஒன்றுதான் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் ஏற்றுமதிக்கான விசேட வரிச்சலுகையை - ஜி.எஸ்.பி. வரி விலக்கை - இலங்கை இழக்கும் ஆபத்து நிலையுமாகும்.

இலங்கை போன்ற மூன்றாம் மண்டல - அபிவிருத்தி அடைந்து வருகின்ற - நாடுகளின் மேம்பாட்டுக்கான உதவியாக, ஐரோப்பிய ஒன்றியம் இத்தகைய சலுகைகளை வழங்கி வருகின்றது.

இந்த விசேட உதவித்திட்டத்தின் கீழ், இலங்கையிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் தைத்த ஆடைகள் போன்ற உற்பத்திப் பொருள்களுக்கு அந்த நாடுகள் வரிவிலக்கு சலுகையை வழங்கி வருகின்றன. இந்தச் சலுகை காரணமாக, இச்சலுகையைப் பெறாத ஏனைய நாடுகளோடு போட்டி போட்டுக்கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்குப் பெருமளவு ஏற்றுமதியை இலங்கையால் மேற்கொள்ள முடிந்தது. அதனால் பெருமளவு அந்நியச் செலாவணியையும் ஈட்டக்கூடியதாக இருந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் வருடாந்தம் பல்லாயிரம் கோடி ரூபா வர்த்தகம் இலங்கை முதலீட்டாளர்களுக்குக் கிடைத்து வந்தது. பல லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பும் தாராளமாக வழங்க முடிந்தது.

ஆனால் நாட்டின் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுக்காக இத்தகைய சலுகை வசதிகளைப் பெறும் ஒரு தேசத்தில் நீதியின் - நியாயத்தின் - சட்டத்தின் - ஆட்சி சரிவர நிலைநிறுத்தப்பட வேண்டும் என உதவும் அந்த நாடுகள் உரிமையோடு எதிர்பார்க்கின்றன.

அதற்காக, மனித உரிமைகள் பேணல், சட்டத்தின் ஆட்சி நிலைநிறுத்தப்படல், நீதி முறை கைக்கொள்ளப்படல் போன்ற அடிப்படை விடயங்கள் தொடர்பான சர்வதேசச் சட்டங்களையும், பிரகடனங்களையும், பட்டயங்களையும் ஒழுங்காகக் கடைப்பிடிக்கும் நாடுகளுக்கு மட்டுமே இந்த உதவி - அல்லது சலுகை - வழங்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் விதிமுறை வகுத்துள்ளது.

இந்த விதிமுறையை நிறைவு செய்யும் ஆட்சி நிர்வாகம் இலங்கையில் இல்லை என்பதால் இந்தச் சலுகையை இலங்கை இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது தொடர்பில் இலங்கை ஆட்சித்துறையின் 'சீத்துவம்' சர்வதேச ரீதியில் பகிரங்கமான அம்சம்.

அதனால் இவ்விடயங்களை இலங்கை ஒழுங்காகக் கடைப்பிடிக்கின்றதா என்பதைத் தான் இலங்கையில் நேரடியாக விசாரணை செய்யவேண்டியிருப்பதால் அதற்கு இசைவும் ஒத்துழைப்பும் தரவேண்டும் என இலங்கையிடம் ஐரோப்பிய ஒன்றியம் கோரியது.

ஆனால் அத்தகைய விசாரணைக்கு இணங்குவது, கொழும்பு அரசின் 'பொட்டுக்கேட்டை' அம்பலப் படுத்திவிடும் என்பதை உணர்ந்துள்ள கொழும்பு நிர்வாகம், அத்தகைய விசாரணை தனது நாட்டின் இறைமையில் ஐரோப்பிய ஒன்றியம் தலையிடும் விவகாரமாகி விடும் எனத் தெரிவித்து, அதனை நிராகரித்து விட்டது.

இந்த நிராகரிப்பால், மேற்படி வரிச்சலுகையை இலங்கை இழப்பது என்பதும் பெரும்பாலும் நிச்சயமாகி விட்டது.

இச்சலுகையைப் பறிகொடுப்பதால் வருடாந்தம் இருபதாயிரம் கோடி ரூபாவுக்கான ஐரோப்பிய ஒன்றிய வர்த்தகச் சந்தையை இலங்கை இழக்கும்.

இதனால் இந்த ஏற்றுமதிச் சந்தையை மட்டும் நம்பி தென்னிலங்கையில் இயங்கிவரும் பல நூற்றுக்கணக்கான ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகள் இழுத்து மூடப்படும் நிலைமை தவிர்க்க முடியாததாகும். சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான ஊழியர்கள் வேலை இழப்பர். அவர்களின் குடும்பங்கள் நடு வீதிக்கு வரும்.

ஏற்கனவே இந்த அரசின் யுத்த வெறிப் போக்கு, தவறான பொருளாதாரக் கொள்கை, நலிவான நிர்வாகம், ஊழல் - முறைகேடுகள் நிறைந்த ஆட்சிக் கட்டமைப்பு ஆகியவை காரணமாகத் தள்ளாடும் நாட்டின் பொருளாதாரத்தில், ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இழப்பு பேரடியாக - பேரிடியாக - தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றது.

ஆனால் ஆட்சித் திமிரில் மிதக்கும் கொழும்பு அரசுப் பீடத்துக்கு அதுபற்றி எல்லாம் கவலை இருப்பதாகவே தெரியவில்லை.

எது, எப்படியோ இந்தப் பாதிப்புகளின் மோசமான விளைவுகளைச் சந்திக்கப் போகின்றவர்கள் இலங்கைத் தேசத்தின் மக்கள்தான். இந்த அரச நிர்வாகத்தை ஆட்சிக் கட்டில் அமர்த்திய குற்றத்துக்காக - தவறுக்காக - அவர்கள் அதை எதிர்கொண்டுதான் ஆகவேண்டும்.

# இலங்கையில் விற்பனை செய்யப்படும் 5 பால்மாக்களில் உடலுக்கு ஊறு விளைவிக்கும் பதார்த்தம் இல்லை

## நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் தகவல்

கொழும்பு, ஒக்.22

இலங்கையில் விற்பனை செய்யப்படும் ஐந்து பால்மா வகை களில் உடலுக்கு ஊறு விளைவிக் கும் - மனிதப் பாவனைக்கு ஒவ்வாத - பதார்த்தம் எதுவும் இல்லை என வர்த்தக சந்தைப் படுத்தல், அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் பந்துலகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்தப் பால்மா வகைகள் சிங்கப்பூருக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கு மேற்கொண்ட பரிசோதனை யின் மூலமே இது உறுதிப்படுத் தப்பட்டுள்ளது. உள்நாட்டு தரக்கட் டுப்பாட்டுக்கு அமைவாகவே அவை தயாரிக்கப் பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்தே அவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சீனாவில் உற்பத்தி செய்யப்படும் பால்மா வகையொன்றை அருந்திய அங்குள்ள சிறுவர்கள் சிலர் இறந்ததோடு பலர் நோய்வாய்ப்பட்டுள்ளனர். இதையறிந்து பால்மா பாவனை தொடர்பாக இங்கு பெரும் பதற்றம் நிலவியது. இதையடுத்து உள்நாட்டில் பாவனையிலுள்ள பால்மா வகைகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

இதன்பிரகாரம் இலங்கையிலுள்ள சகல பால்மா நிறுவனங்களையும் அழைத்துப் பேச்சு நடத்தினேன். அதற்கமைய சகல பால்மா வகைகளின் மாதிரிகளையும் சிங்கப்பூருக்கு அனுப்பி பரிசோதனை செய்யத் தீர்மானித்தோம்.

முதற்கட்டமாக அங்கர், மெலிபன் நெஸ்பிறே, டயமன், கொத்மலை ஆகிய பால்மா வகைகளில் 'மெலமைன்' இல்லை என ஆரம்ப அறிக்கை மூலம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும் 10 பால்மா வகைகளின் மாதிரிகள் சிங்கப்பூரில் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டு வருகின்றன. ஓரிரு வாரத்ததில் அவற்றின் அறிக்கை கிடைக்கும்

**'எட்னா' சொக்லெட்டுக்குத் தடை**

இதேவேளை -

'எட்னா' சொக்லட்டுக்குச் சீனாவிலிருந்து தருவிக்கப்படும் பால்மா பயன்படுத்தப்படுவதால் அதனை நீதிமன்றம் தடை செய்துள்ளது. நீதிமன்ற உத்தரவின்படி அடுத்தகட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் - என்று அவர் தெரிவித்தார்.

# பரிசில் தினம்

தென்மராட்சி, ஒக். 22

மட்டுவில் கமலாசினி வித்தியாலயத் தின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் விழாவில் பிரதமவிருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாகச் சாவகச்சேரி கோட்டக் கல்விப்பணிப்பாளர் நா.சத்தியநாதன், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் க.கண்ணதாசன் ஆகியோரும் கௌரவ விருந் தினராக ஓய்வு பெற்ற அதிபர் செ.சுப்பிரமணியமும் கலந்து கொள்வர். (201)

# யாழ்.மாவட்டத்தில் இவ்வருடம் 9,389 ஹெக்டேயரில் நெற்செய்கை

## இங்கு உற்பத்திசெய்யப்பட்ட விதைநெல்லும் பயன்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், ஒக்.22

குடாநாட்டில் இவ்வருடம் அதிக நிலப்பரப்பில் - 9 ஆயிரத்து 389 ஹெக்டேயரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது பெய்துவரும் பருவமழையை அடுத்து விதைப்பு நடவடிக்கைகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சி.சிவகுமார் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தகவல் தருகையில் மேலும் கூறியவை வருமாறு:

கடந்த வருடத்தை விட இவ்வருடம் அதிக நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த வருடம் காலபோகத்தில் 8 ஆயிரத்து 752 ஹெக்டேயரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வருடம் மாவட்டத்தில் 9ஆயிரத்து 389 ஹெக்டேயரில் செய்கை பண்ணப்படுகின்றது.

கடந்த காலபோகத்தில் பயிர் செய்கைக்கு உட்படுத்தப்படாத விளை நிலங்கள் திருத்தப்பட்டு விதைப்ப நடைபெறுகின்றது. நெல்லரிசிக்கு கிடைக்கும் உயர்ந்த விலை விவசாயிகளின் ஆர்வத்துக்கான பிரதான காரணமாகும்.

உணவு விவசாய தாபனத்தின் நிதி அனுசரணையுடன் 2400 புசல் விதை நெல் எடுத்து வரப்பட்டு 14 விவசாய போதனாசிரியர் பிரிவில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 800 விவசாயிகளுக்கு தலா 3 புசல் நெல் வீதம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

*AT 353* நெல் இனம் *AT 303 BW 351-361 - BG 250* என்ற விதைநெல் இனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நவீன நெல் இனங்களான இவற்றைத் தவிர யாழ்.மாவட்டத்தில் 22 விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட விதைநெல் இனங்களும் விதைப்பில் விவசாயிகளால் பயன்படுத்தப்படுகின்றன.

விவசாயிகளுக்கான உரவகைகளை மானியவிலையில் வழங்குவதற்கு கமநல சேவைத் திணைக்களம் திட்டமிட்டு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

காலநிலை, மழைவீழ்ச்சி போன்ற ஏனைய காரணிகள் பொருத்தமாக அமையும் சூழ்நிலையில் குடாநாட்டு விவசாயிகளின் முனைப்பான நெற்செய்கை ஈடுபாட்டுக்கு ஏக்கருக்குரிய விளைச்சலும் வருமானமும் உயர்வடையும் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கின்றன - என்று அவர் மேலும் தெரிவித்தார். (202-302)

# கந்தசஷ்டி, ஐப்பசி வெள்ளி நாள்களில் மாவைக் கந்தன் ஆலயத்தில் திருவிழாக்கள்

## அடியார்களுக்கு விசேட போக்குவரத்து ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஒக். 22

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் வழமைபோல் இம்முறையும் கந்தசஷ்டி திருவிழா சிறப்பாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக ஆலய ஆதீன கர்த்தரும் பிரதம குருவுமான சு.து.சண்முகநாதக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

கந்த சஷ்டித் திருவிழா ஐப்பசி 20ஆம் நாள்- ஒக்ரோபர் 29ஆம் திகதி- புதன் கிழமை ஆரம்பமாகி நவம்பர் ஐந்தாம் திகதி நிறைவுறும். கந்தசஷ்டி திருவிழாக் காலத்தில் திருச்செந்தூர் புராண படனமும் நடைபெறும்.

கந்தன் அடியார்கள் ஐப்பசி வெள்ளி விரத நாள்களிலும் கந்தசஷ்டி நாள்களிலும் ஆலயத்துக்கு வந்து தரிசிப்பதற்கு வசதியாக விசேட போக்குவரத்து ஏற்பாடு செய்யப் பட்டி ருப்பதாக பிரதம குரு தெரிவித்தார். காலை 9மணிக்கு முன்னர் தெல்லிப்பழை சோதனைச் சாவடிக்கு அடியார்கள் வந்து சேர்ந்தால் இதற்கென ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விசேட வாகனங்களில் சிரமமின்றி ஆலய தரிசனம் செய்து திரும்ப இயலும் என்று அறிவிக்கப் பட்டது.

ஆலயத்தில் சிறப்பு அபிஷேகங்கள், பூசைகள், புராணப்படனம், அன்னதானம் ஆகியன பி.ப 2மணியளவில் நிறைவு பெறும் என்றும் பிரதம குருக்கள் கூறினார். (அ)

# தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு யாழ்.ப.நோ.கூ.சங்கத்தின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக்.22

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு யாழ். பலநோக்குக் கூட்டுவுச் சங்கத்தின் கூட்டுறவு நடமாடும் விற்பனவு நிலையத் தின் அத்தியாவசியப் பொருள்கள் விநி யோகிக்கும் பணிகள் இந்த வாரம் அரச நிறுவனங்களில் இடம்பெறவுள்ளதாக சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை வளாகத்திலும் அன்றைய தினம் மாலை பனை அபிவிருத்தி சபையிலும் சேவை இடம்பெறும்.

மறுநாள் சனிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையிலும், 28 ஆம் திகதி யாழ். செயலகத்திலும், 29 ஆம் திகதி காலை யாழ். பிரதேச செயலகத்திலும் மாலை யாழ். மாநகராட்சி மன்றத்திலும், 30 ஆம் திகதி காலை யாழ். சுகாதாரத் திணைக்களத்திலும் மாலையில் யாழ். கல்வித் திணைக்களத்திலும் இந்த நடமாடும் கூட்டுறவு விற்பனை நிலையம் செயற்படும். அத்துடன் யாழ். நகரில் உள்ள சில பாடசாலைகளிலும் இந்த நடமாடும் கூட்டுறவு விற்பனை நிலையம் செயற்படவுள்ளது.

யாழ். பரியோவான் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, கனகரத்தினம் மகா வித்தியாலயம், யாழ். இந்துக் கல்லூரி போன்ற பாடசாலைகளில் மாணவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் பாடசாலைக் கல்வி உபகரணங்கள் இந்த நடமாடும் சேவை நிலையம் மூலம் விநியோகம் செய்யப்படவுள்ளன. (203)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 07 | 23.10.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: | நவமி |
| | காலை.07.11 வரை |
| நட்சத்திரம் : | ஆயிலியம் |
| | மாலை 06.05 வரை |
| சுபநேரம் : | 07.32-09.02 |
| ராகுகாலம் : | 01.32-03.02 |

# கரவெட்டியில் நேற்றுத் தேடுதல்

கரவெட்டி, ஒக்.22

கரவெட்டியில் திங்கள் இரவு சேட்டபலத்த வேட்டுச் சத்தத்தை அடுத்து அப்பகுதியெங்கும் நேற்று அதிகாலை படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி தொடக்கம் சுமார் 10 நிமிடங்களுக்கும் கூடுதலான நேரம பயங்கரச் சத்தத்துடன் வேட்டுக்கள் தீர்க்கப் பட்டன. அந்த நேரம் பெரும் மழை பெய்து கொண்டிருந்தது.

இதையடுத்து நேற்று அதிகாலை முதல் அப்பகுதியெங்கும் படையினர் தேடுதல் நடத்தினர். (202-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NSB பருத்தித்துறை — ஏல விற்பனை அறிவித்தல்

தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்துறைக் கிளையில் 30.09.2007 வரை அடகு வைத்து 30.09.2008 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

★ ஏல விற்பனைத் திகதி :- 22.11.2008 சனிக்கிழமை காலை 9 மணி
★ இடம் :- தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறை கிளை,
வீரபாகு கட்டடம்,
பருத்தித்துறை.

ஏல விற்பனையை இரத்துச் செய்யும் / ஒத்திவைக்கும் உரிமத்தை வங்கி கொண்டுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கி,
தலைமை அலுவலகம்,
கொழும்பு - 03.

உதவிப் பொதுமுகாமையாளர்
(கடன்).

## 50 ஆவது பிறந்தநாள் வாழ்த்துகள்



திருமதி
**தங்கராஜா- விஜயராணி**

தனது 50ஆவது
பிறந்தநாளை
நாவலடி லேன்,
திருநெல்வேலியில்
உள்ள தனது
இல்லத்தில் இன்று
(22.10.2008)
புதன்கிழமை
கொண்டாடுகின்றார்.
இவரை பத்திரகாளி
தாயாரின் துணை
கொண்டு பல்லாண்டு
காலம் வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
கணவர், மருமக்கள்,
மகள்மார்,
பேர்த்தி, பேரன்
இ.சிவகுமார்.

நாவலடி லேன்,
திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி.

(79390)

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம், ஒக்.22

நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தில் நிலவும் ஹன்சாட் அறிக்கை யாளர் (மும்மொழிகளுக்கும்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மொழிக்கும் விண்ணப்பிப்பவர்கள் ஜி.சி.ஈ.(சா.த) பரீட்சையில் அந்தந்த மொழிகளில் திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கை நாடாளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை 17. 10. 2008 வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)

## பரிசளிப்பு ஒத்திவைப்பு

யாழ்.றோட்டறிக் கழகத்தின் சொல்வதெழுதல் போட்டிக்கான பரிசளிப்புவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுவதாக இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் அது எதிர்வரும் 29 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (201)

## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## பெருந்தெருக்கள் வீதி அபிவிருத்தி அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை வடக்கு-கிழக்கு (வடமாகாணம்)
## பொருள்கள் சேவைகளை வழங்குநர்களை பதிவு செய்தல்-2009

பின்வரும் வகைகளுக்குள் உள்ளடங்கும் பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகாண பரிபாலனத்தின் கீழ்வரும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா பிரதம பொறியியலாளர்களது பிராந்தியங்களுக்கு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் விநியோகத்தர்கள், உற்பத்தியாளர்கள், வியாபாரிகள், வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இருபது வகையான பொருள்களை வழங்குதல்.
02. எட்டு வகையான நிர்மாணப் பொருள்களைப் பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்குதல்.
03. பதினாறு வகையான சேவைகளை வழங்குதல்.
04. பத்து வகையான பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளுக்கான சேவைகளை வழங்குதல்.

பொருள்கள் சேவைகள் மற்றும் விண்ணப்பம் தொடர்பான மேலதிக விவரங்களை www.rda.gov.lk என்ற இணையத்தளத்திலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பின்வரும் அலுவலக தொலைபேசி இலக்கங்களுடனும் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளமுடியும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|
| மாகாணப் பணிப்பாளர்/வ-கி (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா. | 024 222 2826 |
| பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம். | 021 222 2968 |
| நிர்வாக உத்தியோகத்தர், மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம். | 021 222 2517 |
| கணக்காளர், மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா. | 024 4589262 |

வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
வவுனியா.
024-222 2942

எந்திரி: மோசஸ் மரியதாசன்
மாகாணப் பணிப்பாளர்/வ-கி
(வடக்கு).

## கண்ணீர் அஞ்சலி

எமது வழிகாட்டி

**தமிழவேள் கந்தசுவாமி**

அவர்களின் மறைவு சைவத்திற்கும், தமிழ் மொழிக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

இணுவில் கிராம அபிவிருத்திச் சங்கம்,
இணுவில் சைவதிருநெறிக் கழகம்,
இணுவில் சிவகாம சுந்தரி சனசமூக நிலையம்.
இணுவில் கிழக்கு.

(79400)

## பபு ரெக்ஸ்ரைல்ஸ்

நவீனரக பஞ்சாபி, பஞ்சாபித்துணி, சிறுவர்களுக்கான பஞ்சாபி, புதிதாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அத்தோடு ஸ்கேட் அன் பிளவுஸ் சகல விதமான ரெடிமேட் ஆடைகள் என்பன சேல்ஸ் போடப் பட்டுள்ளன. இல.30 கம்பஸ் லேன்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.

## கண்ணீர் அஞ்சலி

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கலாதேவி குகானந்தன்
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி உமாதேவி முருகேசு**

அவர்கள் இறைபதமெய்தியமையால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
பருத்தித்துறை.

(சி/555637)

## COMPUTER EXPRESS
### Institute of Information Technology

No 167, Kasthuriyar Road, Jaffna.
Phone : 021 2228250, 0777 222422 Website : www.ceiit.info email : info@ceiit.info

A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2008 — 80% off

| Course | Fee | Duration |
|---|---|---|
| Diploma in Computer Science | 2,150 | 4 Months |
| Honours Dip in Computer Science | 2,600 | 5 Months |
| Diploma in Web page Designing | 2,150 | 4 Months |
| Diploma in Graphic Designing | 2,150 | 4 Months |
| Diploma in Desktop Publishing | 2,000 | 4 Months |
| Dip in Hardware Engineering | 2,000 | 3 Months |
| Diploma in Microsoft Office | 1,500 | 3 Months |
| Dip in Auto CAD | 2,000 | 3 Months |
| Accounting Package | 2,150 | 2 Months |

50% OFF

| Course | Old fee | Fee |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5,500~~ | 2,750 |
| Diploma in Video Editing | ~~6,500~~ | 3,250 |
| Diploma in Networking | ~~10,000~~ | 5,000 |

ஆரம்பம் :
Batch I : 23/10/2008 - 09AM
Batch II: 25/10/2008 { 11AM 02PM
Batch III: 26/10/2008 { 11AM 02PM
Batch IV: 28/10/2008 - 09AM

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் பொருத்தமான கற்கை நெறியை தேர்ந்தெடுத்து விடுமுறைகாலத்தை பயனுடையதாக்கிகொள்ளுங்கள்.

15/11/2008க்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.----

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.போதனா வைத்தியசாலை விடுதி இல.04 இல் பொறுப்பதிகாரியாக கடமை புரியும் திருமதி M.A .மரியசீலன் அவர்களின் தாயார்

**திருமதி கஸ்மீர் மரியறோஸ்**

அவர்கள் 20.10.2008 அன்று இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திகின்றோம்.

யாழ்ப்பாணம்.

யாழ்.போதனா வைத்தியசாலை
விடுதி இல.04
உத்தியோகத்தர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண வலியுறுத்தி புதுச்சேரி சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றம்

புதுச்சேரி, ஒக்.22

**ஈழத் தமிழர் மீதான இலங்கை இராணுவத்தின் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தக் கோரியும் இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு சுமுகத் தீர்வு காணவேண்டும் என்று வலியுறுத்தியும் புதுச்சேரி சட்டப்பேரவையில் நேற்றுமுன்தினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

இதுகுறித்த முழு விவரம் வருமாறு-

புதுச்சேரி சட்டப்பேரவையின் குளிர் காலக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது.

அப்போது இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே உச்சக் கட்டப் போர் நடந்து கொண்டு இருக்கிறது. இதனால் அப்பாவித் தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக புதுச்சேரி அரசு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்ப வேண்டும் என்று எம்.எல்.ஏ.க்கள் வலியுறுத்தினர்.

இதையொட்டி அரசு சார்பில் முதல்வர் வி.வைத்திலிங்கம் தீர்மானத்தை முன்மொழிந்து பேசியவை வருமாறு-

ஈழத் தமிழர்கள் பாதிக்கப்படக் கூடாது. அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். மேலும் அவர்களுக்கு மருத்துவ உதவி உள்ளிட்டவை கிடைக்க மத்திய அரசு உதவி செய்ய வேண்டும் என்று சட்டப்பேரவையில் அரசு சார்பில் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது என வைத்திலிங்கம் கூறினார்.

இதையடுத்து குரல் வாக்கெடுப்பு வாயிலாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது என சட்டப்பேரவைத் தலைவர் இருக்கையில் அமர்ந்திருந்த சட்டப்பேரவை துணைத் தலைவர் ஏ.வி. ஸ்ரீதரன் கூறினார்.

எம்.எல்.ஏக்கள் எஸ்.பி.சிவக்குமார் (தி.மு.க.), அனந்தராமன் (பா.ம.க.), பி.ஆர். சிவா (ம.தி.மு.க.), எதிர்க்கட்சித் தலைவர் நாஜிம் (தி.மு.க.), க.லட்சுமிநாராயணன் (பு.மு.கா.) ஆகியோர் ஈழத் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசினர்.



ஈழத் தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் நடத்திவரும் மூர்க்கத்தனமான தாக்குதலைக் கண்டித்து கர்நாடகத் தமிழ் மக்கள் இயக்கம் சார்பில் பெங்களூரில் காந்தி சிலை முன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது.......

# ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து தமிழக மாணவர்கள் வகுப்புப் பகிஷ்கரிப்பு

கடலூர், ஒக்.22

ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கக் கோரி, கடலூர் மற்றும் விழுப்புரத்தில் கல்லூரி மாணவ மாணவியர் நேற்றுமுன்தினம் வகுப்புகளைப் புறக்கணித்து ஊர்வலம் நடத்தினர்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே உச்சக் கட்டப் போர் நடந்து கொண்டு இருக்கிறது. இதனால் அப்பாவித் தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கக் கோரி, கடலூர் அரசு பெரியார் கலைக்கல்லூரி மாணவ மாணவியர், கடந்த திங்கட்கிழமை வகுப்புகளைப் புறக்கணித்தனர். கல்லூரியில் இருந்து ஊர்வலமாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு வந்தனர்.

ஊர்வலத்துக்கு கல்லூரி பழைய மாணவர்கள் அகஸ்டின், சிவா, கமலக்கண்ணன், இந்நாள் மாணவர்கள் கிருபா, சண்முகம், ரஞ்சித்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் நடந்த கூட்டத்தில் கல்லூரியின் முன்னாள் பேராசிரியரும் கடலூர் தமிழ்ச் சங்கச் செயலருமான இரா.ச.குழந்தைவேலனார் பேசினார்.

மாணவர்களின் பிரதிநிதிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனுவை அளித்தனர். இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும், கச்சதீவை மீட்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, ஈழத் தமிழர் பிரச்சினையில் திண்டிவனம் கோவிந்தசாமி அரசினர் கலைக் கல்லூரி மாணவர்கள் திங்கள்கிழமை தங்கள் வகுப்புகளைப் புறக்கணித்து இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உருவப் பொம்மையைத் தீயிட்டு எரித்தனர்.

# ஈழத் தமிழருக்கு நிவாரண உதவிகள் கிடைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## நாடாளுமன்றத்தில் தி.மு.க. வலியுறுத்தல்

புதுடில்லி, அக்.22

இலங்கையில், போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு நிவாரண உதவிகள் கிடைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்.பி. செ.குப்புசாமி வலியுறுத்தினார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஈழத் தமிழர் பிரச்சினையை எழுப்பிப் பேசிய போதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு:-

இலங்கையில் தமிழர் தாயகப் பகுதிகளில் விமானப்படை குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருவதால் சுமார் 2 லட்சம் தமிழ்க் குடும்பங்கள் வசிப்பிடங்களை விட்டு வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளன. அவர்கள் உணவு, உடை, குடிநீரின்றித் தவிக்கிறார்கள். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வாழ்வாதாரத்தை இழந்து தமிழ்க் குடும்பங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன.

தமிழகத்தில் முதல்வர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தில் மேற்கொண்ட முடிவின்படி, பிரதமர் மன்மோகன்சிங்கும், மத்திய அரசும் வருகின்ற 29ஆம் திகதிக்குள் ஈழத் தமிழர் பிரச்சினையிலும் இந்திய மீனவர்கள் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்தவும் நடிவடிக்கை எடுக்காவிட்டால் தமிழகத்தைச் சேர்ந்த எம்.பி.க்கள் அனைவரும் பதவி விலக முடிவு செய்துள்ளனர்.

எனவே, இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக தீர்வு ஏற்படவும், உள்நாட்டிலேயே புலம் பெயர்ந்துள்ள தமிழர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகள் கிடைப்பதை உறுதிப்படுத்தவும் மத்திய அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

# ஈழத் தமிழர் பிரச்சினையில் தமது உழைப்பு வீண்போகவில்லை என்கின்றார் கருணாநிதி

சென்னை, ஒக.22

"ஈழத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசின் செயற்பாடுகள் மிகப் பெரிய ஆறுதலைத் தருகின்றன" - என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

இதுகுறித்து, நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு-

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்களை மிகவும் அனுதாபத்தோடு ஏற்றுக்கொண்டு டில்லியிலுள்ள மத்திய அரசு செயற்பட்டு வருகிறது என அன்றாடம் வரும் செய்திகள் நமக்கு மிகப்பெரிய ஆறுதலைத் தருகின்றன.

ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் பேசியிருக்கிறார். மேலும், இலங்கையில் உள்ள நிலைமைகளை வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பி வைக்கவும் மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது எனச் செய்தி வந்துள்ளது.

இலங்கை இராணுவத்தின் அரக்கத்தனமான தாக்குதல்களில் இருந்து அப்பாவித் தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டும் எனவும், தமிழர்களுக்கு நிவாரண உதவிகள் தங்கு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும், பிரதமர் வலியுறுத்தினார் எனச் செய்திகள் வந்துள்ளன.



கடந்த வியாழனன்று ஐ.நா.சபையால் அனுப்பி வைக்கப்பட்ட 750 தொன் உணவுப் பொருள்கள் இலங்கையின் வடக்குப் பகுதிக்கு கொண்டுசெல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், பிரதமர் பேசியதன் விளைவாக, 2 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு அந்த உணவுப் பொருள்கள் வியாழக்கிழமை விநியோகிக்கப்பட்டன என்று செய்திகள் வந்துள்ளன.

எனவே, நம்முடைய உழைப்பு வீண் போகவில்லை என்பது ஆறுதலைத் தந்து கொண்டிருக்கிறது.

# திரையுலகத்தினருக்கு தங்கபாலு கண்டனம்!



சென்னை, ஒக்.22

ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்தும், இந்தப் பிரச்சினையில் இந்திய அரசைத் தலையிடக் கோரியும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இராமேஸ்வரத்தில் திரையுலகம் நடத்திய ஆர்ப்பாட்டத்தில், ராஜீவ் காந்தி படுகொலை குறித்து இயக்குநர்கள் சீமான், அமீர் ஆகியோர் பேசிய பேச்சுக்கு தமிழக காங்கிரஸ் தலைவர் கே.வி.தங்கபாலு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கையில் அல்லற்படும் அப்பாவித் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்புத் தேடும் இந்த நல்ல நேரத்தில் தமிழகத்தில் ஆங்காங்கே இந்தியாவில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை ஆதரித்தும், அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்தும் பல்வேறு நிலைப்பாடுகள் எடுப்பவர்களை தமிழ் இனம் மட்டுமல்ல, எந்த ஒரு சமூகமும் அங்கீகரிக்காது.

தலைவர் ராஜீவ்காந்தி இழப்புக்கு காரணமானவர்களைத் துதிபாடுபவர்களைக் கண்டிப்பது என்னுடைய கடமையாகும். அவர்களது செயல்பாடுகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இந்திய மண்ணில் இது போன்ற வன்செயல் ஆதரவாளர்களுக்கு இடம் அளிப்பதை மத்திய, மாநில அரசுகள் ஆதரிக்க முடியாது. இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசும், பிரதமர் மன்மோகன் சிங்கும் எடுத்து வரும் நடவடிக்கைகள் நம்பிக்கையூட்டுகிறது எனவும், அதை வரவேற்கிறேன் எனவும் முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை இராமேஸ்வரத்தில் திரை உலகத்தினரால் நடத்தப்பட்ட பேரணி பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட சீமான், அமீர் போன்றவர்கள் தமிழினத்தைக் காக்கின்ற மத்திய அரசையும், ஈழத் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அரணாகவே இருந்து பல்வேறு நடவடிக்கைகளை தங்கள் காலத்தில் செயல்படுத்திய இந்திரா காந்தியையும், தலைவர் ராஜீவ்காந்தியையும், அவரது படுகொலையைக் கொச்சைப்படுத்தியும், நியாயம் கற்பித்தும் பேசியதை தமிழகக் காங்கிரஸ் வன்மையாக கண்டிக்கிறது.

இலங்கைத் தமிழர்களின் முழு உரிமைக்கும், உடைமைகளுக்கும் அரசியல் அந்தஸ்து ஆகியவற்றுக்கும் பாதுகாப்பு முயற்சி எடுத்து வரும் மத்திய அரசுக்கு ஆதரவளிப்பது சோனியாகாந்தி, பிரதமர் மன்மோகன்சிங் ஆகிய தலைவர்களின் கரத்தை வலுப்படுத்த தமிழ் மக்கள், குறிப்பாக தமிழ் இன உணர்வாளர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நின்றிட வேண்டும் என்று பெரிதும் வேண்டுகிறேன்.

# எம்.பிக்கள் ராஜினாமாச் செய்வதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தயக்கம்?

சென்னை, ஒக்.22

ஈழத் தமிழருக்கு ஆதரவாக அனைத்துக் கட்சி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி எம்.பிக்கள் ராஜனாமாச் செய்வதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தயக்கம் காட்டி வருகிறது.

ராஜினாமா செய்யும் விவகாரம் ஒவ்வொரு கட்சியும் தனியாக முடிவெடுக்க வேண்டியது என்று அந்தக் கட்சி கூறியுள்ளது.

சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் மாநில செயற்குழுக் கூட்டத்தில் இதுகுறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதில், "அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ராஜினாமா செய்ய நேரிடும் என்ற தீர்மானம் முன்மொழியப்பட்டபோது, அந்தக் கூட்டத்திலேயே மார்க்சிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகள் இது ஒவ்வொரு கட்சியும் சுயேச்சையாக முடிவெடுக்க வேண்டிய பிரச்சினை என்று தெளிவுபடுத்தி உள்ளனர்" என்று கூறப்பட்டுள்ளது.

"ராஜினாமா குறித்து கட்சி மேலிடம்தான் முடிவெடுக்க முடியும்" என்று தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.வீ.தங்கபாலு தெரிவித்துள்ளார்.

மத்திய அரசுக்கு அளித்துள்ள காலக்கெடு முடிய இன்னும் ஒரு வாரமே உள்ளது. இந்தச் சூழ்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா குறித்து ஒவ்வொரு கட்சியும் தங்கள் நிலைப்பாட்டைத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய அரசை யாரும் விமர்சிக்கவேண்டாம்

## கருணாநிதி அறிவுரை

தாம்பரம், ஒக். 22

ஈழத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசை அவசரப்பட்டு யாரும் விமர்சிக்க வேண்டாம் என்றும் - இதுதொடர்பாக தமிழகக் காங்கிரஸ் தலைவர் கே.வீ. தங்கபாலு வெளியிட்ட அறிக்கையை முழுமையாக ஆதரிக்கிறேன் என்றும் முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

சென்னை மீனம்பாக்கத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விழாவில் விமான நிலைய விரிவாக்கத் திட்டத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்துப் பேசியபோதே அவர் அதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசியவை வருமாறு-

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈழத் தமிழர்களுக்காக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் - ஓர் அறப் போராட்டத்தில் பங்கேற்ற நடிகர்கள் ஏதோ தவறுதலாக மத்திய அரசைப் பற்றி கோபதாபத்தோடு பேசினார்கள். அவர்கள் உரிமையோடு பேசினார்கள் என்றாலும்கூட, சற்று அளவுக்கு மீறிப் பேசி விட்டார்கள் என்பதற்காக தமிழகக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு கோபத்தோடு ஒரு மறுப்பு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். நான் அந்த மறுப்பை மதிக்கிறேன்.

அப்படிப்பட்ட கூட்டங்களிலே நாம் கடைப்பிடிக்க வேண்டியவை அடக்கம், அமைதி, நாகரிகம், பண்பாடு. இதை நாம் மறந்துவிடக் கூடாது. அப்படி மறந்து விட்டால் அதனால் அடையக்கூடிய பயன்கள் - நாம் எதை எதிர்பார்த்தோமோ அதை இழந்தவர்களாக ஆகி விடுவோம்.

# ஈழத் தமிழர்களுக்கு உதவ மத்திய அரசு நேரடி நடவடிக்கையில் இறங்கவேண்டும்

## திராவிடர் கழகம் தீர்மானம்

சென்னை, ஒக்.22

ஈழத்தமிழர்களுக்கு நியாயமான உதவி கிடைக்காவிட்டால், மத்திய அரசு நேரடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என கி.வீரமணி கூறியுள்ளார்.

திராவிடர் கழகத்தின் தலைமைச் செயற்குழுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. கூட்டத்திற்குத் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை தாங்கினார்.

அந்தக் கூட்டத்தில் -

★ தமிழர்களுக்கு எதிரான போர் நடவடிக்கைகளை நிறுத்தாமலும், பாதிப்புக்கு ஆளாகி வரும் ஈழத் தமிழர்களுக்கு தேவையான நியாயமான உதவி கிடைக்காமல் போகும் நிலை ஏற்படுமாயின், அதற்கு அடுத்தக்கட்ட, கடுமையான நேரடி நடவடிக்கையில் ஈடுபடவும் மத்திய அரசு சற்றும் தயங்கக்கூடாது - என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கொழும்பில் மின் மாற்றிகள் கடும் சேதம்!

கொழும்பு, ஒக். 22

கொழும்பு, பொறளை மற்றும் கிறீன் பாத் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள இரு மின் மாற்றிகள் நேற்று முன்தினம் மாலை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

மின்மாற்றிகள் சேதமடைந்துள்ளதால் அந்தப் பகுதிகளில் நேற்று முன்தினம் மாலையிலிருந்து தற்காலிகமாக மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம்மாலை பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட மின் ஒழுக்குக் காரணமாகவே இந்த மாற்றிகள் எரிந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மின்மாற்றிகளைத் திருத்தும்பணிகளை மின்சார சபை மேற்கொண்டுவருகிறது.

(சி)

## கணக்காய்வு பரீட்சகர் சேவைக்கு ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.22

கணக்காய்வுப் பரீட்சகர் சேவையில் கணக்காய்வு பரீட்சகர் தரம் II இக்கு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆள்சேர்ப்புச் செய்யப்படவுள்ளது.

இப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பரீட்சை அடுத்த மாதம் கொழும்பிலும் யாழ்பாணத்திலும் நடத்தப்படவுள்ளது.

இப் பரீட்சைக்கு பல்கலைக்கழகப் பட்டதாரி அல்லது இலங்கை பட்டயக் கணக்கீட்டு நிறுவகத்தின் 'லைசன் சியேட்' அல்லது இன்டமீடியட்' பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் 'பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்த, பத்தர முல்ல' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 17.10.2008 வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)

## நீங்காத நினைவுகள்

| ஐம்பத்தி மூன்றாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு |
|---|---|
| மலர்வு 02.01.1908 | மலர்வு 19.04.1915 |
| உதிர்வு 28.08.1955 | உதிர்வு 26.10.2005 |
| அமரர் வல்லிபுரம் தாமோதரம்பிள்ளை (தபாலதிபர்) | திருமதி இரத்தினம்மா தாமோதரம்பிள்ளை<br>திதி: ஐப்பசி அபரநவமி (22.10.2008) |





உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*தா.ஸ்ரீபாலா,*
*461, கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.* *(79369)*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அமரர் பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரன்

### நினைவுப் பேருரை

**"CHEMICAL CARCINOGENESIS & ITS POSSIBLE IMPACT IN JAFFNA PENINSULA"**

**பேருரை வழங்குநர்:**

வைத்திய கலாநிதி என்.ஜெயக்குமாரன்
MBBS (SL) MD (SL)
Consultant Clinical Oncologist
Teaching Hospital, Jaffna

**இடம்:** கைலாசபதி கலையரங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
**திகதி:** நாளை (23.10.2008) வியாழக்கிழமை
**நேரம்:** முற்பகல் 10.00 மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

21.10.2008. *(8/555630)* பதில் பதிவாளர்.

## மரண அறிவித்தல்

### திருமதி உமாதேவி முருகேசு

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், கரவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உமாதேவி முருகேசு 19.10.2008 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - சின்னப்பிள்ளை தம்பதியினரின் ஏக புத்திரியும், சங்கரப்பிள்ளை - பத்தினி தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான க.கதிர்காமத்தம்பி *(R.M.P)*, க.சிவபாதசுந்தரம் (முன்னாள் அதிபர், யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), க.கணேசபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நிர்வாக உத்தியோகத்தர் சங்கரப்பிள்ளை முருகேசுவின் அன்பு மனைவியும் விசாலாட்சி, *Dr.*சிவபாலன் (அமெரிக்கா), *Dr.*சிவசங்கரம் (கனடா), விநாயகமூர்த்தி (பொறியியலாளர், அமெரிக்கா), க.கலைவாணி (ஆசிரியை, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), பா.கலையரசி (கொழும்பு), கு.கலாதேவி (ஆசிரியை, யா/மெதடிஸ்த பெண் கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சி.லோகநாதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சி.பானுமதி (அமெரிக்கா), சி.வள்ளியம்மை(கனடா), வி.யசோதரா(அமெரிக்கா), கோ.கயிலாசநாதன் (உ.க.ப.வலயக்கல்வி அலு வலகம், தென்மராட்சி), ந.பாஸ்கரன் (கொழும்பு), சி.குகானந்தன் (பொறியியலாளர்- *Eurovile*) ஆகியோரின் அன்பு மாமியாரும், லோ.நந்தகோபால் (பொறியியலாளர், லண்டன்), கே.நிரஞ்சனா, லோ.நந்தரூபன்(மொறட்டுவைப் பல்கலைக்கழகம்), சி.மயூரன் (அவுஸ்திரேலியா), சி.கவின் இராசதுரை(அமெரிக்கா), வி.கஜன் (அமெரிக்கா), வி.பிரியந்தி (அமெரிக்கா), க.பிரணவன், க.பானு கோபிகன், க.பிருதுவி, பா.அபிராமி, பா.யாமினி, கு.கஜானன், கு.வைகுந்தன், ந.மஞ்சுளா (லண்டன்), வீ.கேதீஸ்வரன்(லண்டன்), ம.லிசான்(அவுஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியும் க.வள்ளியம்மை, சி.செல்வராணி, க.பொன்னம்மா, வீ.சின்னப்பிள்ளை, ச.கணபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2008) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோ.கயிலாசநாதன்
(மருமகன்).

*சரஸ்வதி வித்தியாலய வீதி,*
*மையிலி ஒடை,*
*கரவெட்டி வடக்கு, கரவெட்டி.* *(8/555331)*





இப்போது புதிய சேமிப்பு கணக்கினை அறிமுகப்படுத்துகிறது

'இலங்கையின் அதிசிறந்த நுகர்வோர் சேவைகளை வழங்கும் வங்கி' - ஏசியன் பேங்கர்

சர்வதேசத்தர விருதுபெற்ற வர்த்தக வங்கியான ஹற்றன் நஷனல் வங்கி, ஆகக்குறைந்த ரூபா 50,000 ஆரம்ப வைப்புக்கு 12.5%* மும் ஆகக்குறைந்த ரூபா 100,000 ஆரம்ப வைப்புக்கு 14%** மும் வருடாந்த வட்டியாக வழங்குகிறது. அத்துடன் நீங்கள்

**எத்தனை தடவைகளேனும் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளலாம்.**

- இலவச இணைய வங்கிச்சேவை
- இலவச SMS வங்கிச்சேவை
- 90% வரை துரித கடன் வசதி
- இலவச ATM அட்டை

அதிசிறந்ததிலிருந்தே அதிசிறந்ததைப் பெறமுடியும்.

கெபிடல் சேமிப்புக் கணக்குகள் பத்தும் விமன சீட்டிழுப்பிற்கு தகுதி பெறாது.
HNB, ஃபிச் ரேட்டிங் லங்காவினால் AA⁻ (lka) ஆக தரப்படுத்தப்பட்டுள்ளது.

* 12.5% வருடாந்த விளைவு வீதம் 13.24%
** 14% வருடாந்த விளைவு வீதம் 14.93%

HNB CAPITAL SAVINGS
HNB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சார்த்த மின்வெட்டால் மாணவர்கள் பெரும் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஒக்.22

மின்சார சபையினரால் தற்போது பரீட்சார்த்த மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளமையால் பாடசாலை மாணவர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

பரீட்சார்த்த மின்வெட்டு ஒழுங்கற்ற விதத்தில் பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபட்டுக் காணப்படுகின்றது.

சில பிரதேசங்களில் இரவு வேளைகளில் அரை மணிநேரமும் சில பிரதேசங்களில் ஒன்று தொடக்கம் இரண்டு மணித்தியாலங்களும் மின்வெட்டு இடம்பெறுகின்றது. இதேபோன்று அதிகாலை நேரங்களிலும் 2 மணித்தியாலம் வரை மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது.

இதனால் பரீட்சைக்காக -குறிப்பாக ஜீ.சீ.ஈ. சாதாரண பரீட்சைக்காக - கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர். (203-302)

## லயன்ஸ் கழகத்தின் பிராந்தியம் 10 இன் தலைவர் யாழ்ப்பாணம் விஜயம்

யாழ்ப்பாணம், ஒக்.22

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட பிராந்தியம் 10 இன் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்திற்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

கழகத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு நலத் திட்டங்களைப் பிராந்தியத் தலைவர் ஆரம்பித்து வைக்கவுள்ளார் என சாவகச்சேரி கழகச் செயலாளர் லயன் எஸ்.கே.நவரத்தினம் தெரிவித்தார். (202-207)

## மானிப்பாய் இந்துவில் தரம் 6 அனுமதி

மானிப்பாய், ஒக்.22

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் அடுத்த ஆண்டு தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படுகின்றன. அடுத்த மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி படிவங்களை கல்லூரியில் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (201)

## கெயர் நிறுவனத்தில் திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம், ஒக்.22

சர்வதேச கெயர் நிறுவனம் திட்ட பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி யுள்ளது.

விண்ணப்பதாரி சமூக விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றவராகவும் இரண்டு வருட அனுபவம் உள்ளவராகவும் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முழுவிவரங்களையும் 21.10.2008 உதயன் பத்திரிகையில் பார்வையிடலாம். (ப)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.22

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் இ.சுப்பிரமணியம் எழுதிய 'சமூக அறிவியல் இயற்கை விஞ்ஞானமும் கூட்டுறவு அபிவிருத்தியும்' என்னும் நூல் வெளியீட்டு விழா வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாச மண்டபத்தில் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் சமாசத் தலைவர் சி.சந்திரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி கணக்காய்வாளர் எஸ்.கனகசபாபதி ஆகியோர் கலந்து கொள்வர்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா வெளியீட்டுரையையும், யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி க.தேவராஜா ஆய்வுரையையும் நிகழ்த்துவர்.

முதற் பிரதியை மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கி கிளைமுகாமையாளர், க.சிவகுமாரன் பெற்றுக்கொள்வார். (1-ரி)



அச்செழு சைவப்பிரகாச வித்தியாலத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பாடசாலை உருவாக்குவதற்கு உழைத்தவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றன.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும் பாடசாலை அதிபர் ச.வேலழகன் மற்றும் கல்லூரியின் உருவாக்கத்துக்கு உழைத்த பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

(படம்:அச்சுவேலிச் செய்தியாளர்)

## பருவமழை ஆரம்பித்துள்ளமையால்
# நெடுந்தீவு மக்களுக்குத் தேவையான பொருள்களை கூ.சங்கம் கையிருப்பில் வைத்திருக்கக் கோரிக்கை

நல்லூர், ஒக்.22

பருவமழை ஆரம்பித்துள்ளமையால் நெடுந்தீவுக்கான போக்குவரத்துச் சேவையில் தடங்கல்கள் ஏற்படலாம். எனவே இப்பிரதேச மக்களுக்கு 3 மாதங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கையிருப்பில் வைத்திருப்பதற்கு யாழ்.செயலகம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிரதேச மக்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பருவமழையால் கடுங்காற்று, கடல் கொந்தளிப்புகள் இனிவரும் மாதங்களில் இடம்பெறுவது சகஜம். இக்காலங்களில் ஐப்பசி முதல் மார்கழி மாதம் வரையான மூன்று மாதங்களில் நெடுந்தீவு மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களை அந்தந்த மாதங்களில் எடுத்துவருவதில் பல்வேறு கஷ்டங் கள் ஏற்படும்.

இதனால் குறிப்பிட்ட காலங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் களஞ்சியப்படுத்தி வைக்கப்படுவது வருடா வருடம் தொடர்ச்சி யாக இடம்பெற்றுவந்தது.

இந்தப் பருவகாலத்திலும் மக்களின் அத்தியாவசிய உணவுத் தேவைகள் தடைப்படாதவாறு முன்கூட்டியே உணவுப் பொருள்களைக் கையிருப்பில் வைக்க அரச அதிபர் ஆவன செய்யவேண்டும். - எனப் பொது மக்கள் கோரியுள்ளனர்.

(202-111)

## அரச சேவையாளர்களுக்கு சான்றிதழ் கற்கைகள்

மானிப்பாய், ஒக்.22

இலங்கை நிர்வாக சேவை மற்றும் திட்டமிடல் சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு 'சிலிடா' *(SLIDA)* நிறுவனம் சான்றிதழ் கற்கை நெறியொன்றை நடத்தவுள்ளது.

'பொருளாதாரமும் நல்லாட்சியும்' என்னும் கற்கைநெறியே நடத்தப்படவுள்ளது. இக்கற்கைநெறி விரைவில் கொழும்பில் நடத்தப்படவுள்ளதாக 'சிலிடா' நிறுவனப் பணிப்பாளர் டபிள்யூ.எம்.பந்துணே அறிவித்துள்ளார்.

இதேவேளை அரச அலுவலர்கள் மற்றும் உள்ளூராட்சி அலுவலர்கள் ஆகியோருக்கு முயற்சியாண்மை அபிவிருத்திக்கான சான்றிதழ் கற்கை நெறியும் நடத்தப்படவுள்ளது.

திணைக்களத் தலைவர்களின் ஊடாக இக் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

(202-95)

## தியாகி அறக்கொடை நிலையத்தால் வேலணையில் முதியோர் நலத்திட்டம்

நல்லூர், ஒக்.22

தியாகி அறக்கொடை நிலையம் வேலணை பிரதேச செயலர் பிரிவில் முதியோருக்கான நிதி உதவித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் முதியவர்களுக்கு மாதாந்தம் நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற சிறுவர், முதியோர் தின நிகழ்வின் போது யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி முதியவர்களுக்ககான நிதி உதவியை வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

(202-111)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# உள்ளூராட்சி மறுசீரமைப்புத் திட்டங்கள் வெற்றிபெற அலுவலர்கள் முனைப்புடன் செயற்படுவது அவசியம்

## வடமாகாண உள்ளூராட்சிச் செயலர் தெரிவிப்பு

மானிப்பாய், ஒக்.22

உள்ளூராட்சி மறுசீரமைப்புத் திட்டங்கள் வெற்றி அடையவேண்டுமெனில் சகல உள்ளூராட்சி அலுவலர்களும் முனைப்புடன் செயலாற்ற வேண்டும்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தி.இராசநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்ற செயலாளர், உள்ளூராட்சி உதவியாளர்கள், நிகழ்ச்சித்திட்ட அதிகாரிகளுக்கான திட்டமிடல் கருத்தரங்கு யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட தி.இராசநாயகம் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு மாகாண அரச ஊழியர்களுக்கு 30 மில்லியன் ரூபா மாதாந்தம் செலவிடப்படுகின்றது.

இந்த நிதி மக்களிடம் இருந்து பெறப்படும் வரி மூலமே வேதனமாக வழங்கப்படுகின்றது.

ஆனால் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள், அலுவலர்கள் 7 நாள்களில் அல்லது 10 நாள்களில் செய்து முடிக்கப்பட வேண்டிய வேலைகளை மூன்று மாதங்கள்வரை இழுத்தடிப்புச் செய்கிறார்கள்.

அலுவலர்கள் வேலை தெரியாவிட்டால் பயிற்சி பெற்றபின் அதனை செய்து முடிக்க வேண்டும்.

வேலை செய்யும் ஆற்றலும், விருப்பமும் உடைய பெரும்பாலானோர் வேலையின்றி வெளியில் உள்ளனர்.

பொதுமக்களுக்கு எவ்வாறு சேவையாற்ற வேண்டும், எவ்வாறு அதன் பலாபலனை மக்களுக்கு வழங்க வேண்டும் என குடிமக்கள் பட்டயம் மூலம் விளக்கியுள்ளோம்.

ஆனால் குடிமக்கள் பட்டயம் செயலுருப்பெறாத வகையில் பணியாற்றினால் மக்களுக்கு உண்மையான சேவை கிட்டாது போய்விடும் - என்றார்.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

எமது உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள் போதுமான சேவையை உடனுக்குடன் வழங்கி வருகின்றனர்.

பொதுமக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகளை நிறைவேற்றாத அலுவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவர்களது சேவை முடிவுக்கு கொண்டுவரவும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

(203-95)

## இலவச மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், ஒக்.22

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் அல்லாரைப் பகுதி மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாமை எதிர்வரும் 2ஆம் திகதி அல்லாரை அ.த.க.பாடசாலையில் நடத்தவுள்ளனர்.

கண்,நீரிழிவு, இரத்த அழுத்தம், தொழு நோய், பெண்ணோயியல், பொதுமருத்துவம் ஆகிய நோய்களுக்கான பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளதாக கழகச் செயலாளர் அறிவித்துள்ளார். (203-207)



நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வாணிவிழா நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

வித்தியால அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் உரையாற்றுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயர் குருதி அழுத்தமா? சமையலறைக்கு ஓடுங்கள்

உயர் குருதி அழுத்தம் உங்களுக்கு இருக்கின்றதா? கவலை வேண்டாம். தினமும் உள்ளியில் ஒரு பல் (துண்டு) தினமும் சாப்பிட்டு வந்தாலே போதும். குருதி அழுத்தமெல்லாம் காணாமலே போய்விடும். இதை நான் சொல்லவில்லை. அவுஸ்திரேலியாவில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு ஆய்வுகளின் முடிவில் இதனைத் தெரிவித்துள்ளனர்.

நீங்கள் யோசிப்பது புரிகின்றது. இது எங்கள் பாட்டி காலத்து வைத்தியம். புதுசாக அவுஸ்திரேலியாக்காரர்கள் சொல்லித்தான் தெரியவேண்டுமா? என்கின்றீர்களா.

நமக்குத் தெரிந்த வைத்தியம்தான். அதற்கு இப்போது மருத்துவ அங்கீகாரம் என்னும் முலாம் பூசப்பட்டு அறிவியல் அறிக்கையாக வெளிவந்திருக்கின்றது.

பாட்டிகளும், தாத்தாக்களும் சொன்ன வைத்தியத்தை மறந்துவிட்டிருந்த நமது உதாசீனத்துக்குக் குட்டு வைத்திருக்கிறது இந்த ஆராய்ச்சி என்றுகூடச் சொல்லலாம்.


உயர் குருதி அழுத்தத்துக்கான மாத்திரைகளை விட அதிக பலனளிக்கக் கூடியது இந்த உள்ளி வைத்தியம். உலகெங்கும் பல கோடிப்பேர் மிகச் சாதாரணமாகப் பாதிப்புக்கு உள்ளாகும் நோய் உயர் குருதி அழுத்தம். உயிருக்கே கூட உலை வைக்கும் இந்த நோயைப் பெரும்பாலானோர் ஒரு பொருட்டாகக் கூட எண்ணுவதில்லை என்பதுதான் உண்மை.

அவுஸ்திரேலியாவில் நடந்த இந்த விரிவான ஆராய்ச்சி சுமார் ஐந்து மாத காலம் தொடர்ச்சியாக நடந்திருக்கிறது. பல்வேறு உலக ஆய்வுகளின் முடிவுகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்ட இந்தச் சோதனையின் முடிவாகத்தான் உள்ளி, பல மாத்திரைகளை விட வலிமை வாய்ந்தது என்பது நிருபிக்கப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சியின் முதுகெலும்பான மருத்துவர் கேரின் ரெய்ட் இது தொடர்பாகக் கூறுகையில், ''உயர் குருதி அழுத்தத்தை மருந்துகளால் குணப் படுத்த முடியுமோ இல்லையோ, உள்ளியின் மூலம் குணப்படுத்திவிடலாம்'' என நம்பிக்கை தெரிவிக்கிறார்.

உயர் குருதி அழுத்தமா? இனிமேல் ஆஸ்பத்திரியை நோக்கி ஓடாமல் சமையலறையை நோக்கி ஓடுங்கள். சமையலறையிலேயே அதற்குரிய மருந்து இருக்கிறது!!

தாசன், உரும்பிராய்.

# மீண்டும் ஓர் எச்சரிக்கை



சிறுவர்களின் கைகளிலே கைத்தொலை பேசிகளைக் கொடுத்து அதிகநேரம் பேசச் சொல்லும் பெரியவர்களுக்கு!

கைத்தொலைபேசி பயன்படுத்துவது ஆபத்து என ஏற்கனவே பல்வேறு ஆய்வுத் தகவல்கள் தெரிவித்திருந்தும் அதை அலட்சியம் செய்தவர்களுக்கு!

மீண்டும் ஒரு முறை எச்சரிக்கை செய்ய வந்திருக்கிறது சுவீடன் நாட்டு விஞ்ஞானிகளின் புதிய ஆராய்ச்சி முடிவு.

16 வயதுக்குட்பட்டவர்கள் கைத்தொலை பேசியைப் பயன்படுத்தினால் அவர்களுக்கு மூளைப் புற்றுநோய் வரும் ஆபத்து மற்றவர்களைவிட 5 மடங்கு அதிகம் என்பதே அந்த ஆராய்ச்சியின் முடிவு.

அண்மையில் லண்டனில் நடந்த ஆராய்ச்சியாளர்களின் மாநாடொன்றில் இந்த ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கைத்தொலைபேசியை அதிகமாகப் பயன்படுத்துபவர்களுக்கு 'கிளையோமா' என்னும் ஒருவகை மூளைப் புற்றுநோய் உருவாகும் வாய்ப்பு உள்ளது.

16 வயதுக்குட்பட்ட கைத்தொலைபேசி பாவிப்பவர்களுக்கே இந்த நோயின் பாதிப்பு அதிகம் இருக்கும் என்றும் தனது ஆய்வு முடிவை வெளியிட்டிருக்கின்றார் சுவீடன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் லெனார்ட் ஹாட்டெல்.

20 வயதுக்குட்பட்டவர்கள் அனைவரும் கைத்தொலைபேசி பயன்படுத்துவதை அறவே தவிர்க்கவேண்டும். மிகமிக அவசியமான நேரங்களில் மட்டும் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

20 வயதுக்குட்பட்டவர்களுக்கு மண்டை ஓடு உறுதியற்று இருப்பதாலும் கதிர்களைக் கடத்தும் வாய்ப்பு அதிகம் இருப்பதாலும் கைத் தொலைபேசிகளின் கதிர் அலைகளால் மூளைபாதிப்புக்குள்ளாகின்றது.

இந்த ஆராய்ச்சி முடிவால் பிரிட்டன் வாசிகள் தான் அதிகளவில் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர். ஏன் தெரியுமா? அங்கு 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 90 சதவீதம் பேர் கைத்தொலைபேசி வைத்திருக்கின்றார்கள். ஆரம்பப் பாடசாலைகளில் கற்கும் பிள்ளைகளில் 40 சதவீதம் பேர் கைத்தொலைபேசி வைத்திருக்கின்றார்களாம்.

யமுனா, கொடிகாமம்




யாழ் குடாவில்

விடுமுறை நாட்களிலும்

உங்கள் வசதிக்காக வெஸ்டர்ன் யூனியன் மூலமாக அனுப்பும் பணத்தை MMBL மணிமாஸ்டர் நிலையங்களில் பெற்றுக் கொள்ள யாழ் குடா நாட்டில் வார இறுதி நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் திறக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு

011 452 99 99

WESTERN UNION
மணி டிரான்ஸ்பர்

MMBL Money Master
செல்லுமிடமெல்லாம் நாமிருப்போம்

MMBL மணி ட்ரான்ஸ்பர் பிரைவேட் லிமிடட்
உடனடி அழைப்பிற்கு 011 452 99 99
077 791 55 43


## சீதனம்

திருமணத்தில்
முக்கியம்வேண்டும்
இருமனம்
பின்பு – ஏன்
அம் மனதில்
எழுகின்றது - பெரும்பணம்

மகே.மேனன்,
கொற்றாவத்தை.

## அபூர்வ அன்பு...

தென்றல்
உரசிப் போனபின் - நீ
உரசி என்ன பயன்?
தென்றலே.....
என் காதலி......

சா.ரமேஸ்குமார்,
மீசாலை கிழக்கு.

## நண்பன்!

அந்த நாள் ஞாபகங்கள் - என்
நெஞ்சை விட்டு இன்னமும்
அகலவே இல்லை - என்னைத் தூக்கி
இதயத்தில் இருத்தியவர்களும்
ஒதுங்கிநின்றார்கள்......
சொல்லப் போனால் - என்
உறவுக்காரர்களே..........
என்னை முறைத்துப்
பார்த்தார்கள் - ஆனால்
என்னைத் தூரத்தில்
பார்த்ததும் - ஒருவன்
உயிர் உருக ஓடிவந்தான்........
வாலை ஆட்டியபடி.........

வி.முகிலன்,
நெடுந்தீவு.


## ஏமாற்றம்

காதலித்தால்
கவிதை வரும்
என்றார்கள்
ஆதலால்
காதலித்தேன்
கவிதைகள்
ஏராளம்
குவிந்தன
ஆனால்
காதலியோ
இன்னொருவனை
கவிஞனாக்கப்
புறப்பட்டுவிட்டாள்

எஸ்.கவிதரன்,
சண்டிலிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்



**பொது**வாகவே வாழை மரம் குலை போடும் போது ஒரு பொத்தி மட்டுமே வருவது வழமை. வழமையை மீறுகின்ற விதி விலக்குகளும் அவ்வப்போது நிகழத்தான் செய்கின்றன. சில மாதங்களுக்கு முன்பு நெல்லியடி, முடக்காடு என்னும் இடத்தில் உள்ள ஒரு விவசாயியின் வீட்டில் ஆறு பொத்திகளோடு வெளிவந்து, அனைவரையும் ஆச்சரியப்படுத்திய வாழையின் படத்தையே இப்போது நீங்கள் பார்க்கிறீர்கள்! இது தான் இயற்கையின் விளையாட்டு!

(படமும் தகவலும்: கலைஞன்)




**பனை**மரத்திற்கு கிளைகள் இருப்பதில்லை. ஆனால் வடமராட்சி, வல்லிபுரம் சக்கரத்தாழ்வார் ஆலயச் சூழலில் கிளை பரப்பி வளர்ந்துள்ளது இந்தப் பனைமரம். கிருஷ்ணன் துயில் கொள்கின்ற, பல தலைகளை உடைய ஆதிசேடன் என்ற பாம்பின் அவதாரமாக இந்த மரம் வழிபடப்பட்டும் வருகின்றது. எனினும் இது பனை மரமல்ல, அதைப் போன்ற சாயலுடைய வேறொரு வகையைச் சேர்ந்ததே இந்த மரம் எனவும் கருத்து நிலவுகின்றது. (படமும் தகவலும்: கலைஞன்)




**பா**ர்ப்பதற்கு ஐந்து வயதுச் சிறுமியைப் போலயே தோற்றமளிக்கும் இந்த உருவம் உண்மையிலேயே ஒரு இயந்திர மனிதன். (ரோபோ)

புதுமை பண்ணுவதையே வழக்கமாகக் கொண்டிருக்கும் ஜப்பானிய ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்பே இது!

இந்த 'ரோபோ' விற்கு 'ரிப்லீ ஆர் - I' என்று பெயரிட்டுள்ளார்கள் - மனிதர்களைப் போலவே நடந்து, கண்சிமிட்டி, தலையை அசைத்து செயற்படக்கூடிய வகையில் இந்த 'ரோபோ' உருவாக்கப்பட்டுள்ளது.



உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லையென்று பாரதி பாடினான். அப்படி அச்சமேதுமின்றிப் பிரேசில் நாட்டிலுள்ள மலை உச்சியில் ஆபத்தான அழகுகொண்ட இந்தக் குடியிருப்புகள் நிறுவப்பட்டு வருகின்றன. சாகச வாழ்வை விரும்பும் பலர் இந்தக் குடியிருப்புகளில் வசிப்பதற்கு இப்போதே பதிவு செய்யத் தொடங்கி விட்டார்கள்.



யாழ்.நல்லூரில் பூச்சுக்கள் உதிரத் தொடங்கிய நிலையிலும், இன்னும் கம்பீரமாகக் காட்சிதருகின்றது இந்தப் புராதன நுழைவாயில். சங்கிலியன் தோப்பில் இந்த நுழைவாசல் அமைந்துள்ளதால் 'சங்கிலியன் நுழைவாசல்' என்றே இதனைப் பலரும் எண்ணுகின்றனர். ஆனால் உண்மையில் இது டச்சுக்காரர் எனப்படும் ஒல்லாந்தர் கட்டிய நுழைவாசல்தான்.வரலாற்றின் சரியான பக்கங்களை இனியாவது தெரிந்து கொள்ள முயற்சிப்போம்.

(படம்:- கலைஞன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## பட்டப்பின் படிப்புகள் பீடம்
## பரீட்சைகள் - 2008

கல்வியாண்டு 2007/2008இல் கீழ்க்குறிப்பிடப்பட்ட கற்கை நெறிகளை மேற்கொண்டு வரும் மாணவர்களிடமிருந்து முதலாம் அரையாண்டுக்கான பரீட்சை அனுமதி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி (வவுனியா வளாகம்)
2. கல்வியியல் முதுமாணி மற்றும் முதுகலைமாணிக் கற்கைநெறிகளான
3. அபிவிருத்திக் கற்கைநெறி
4. குடித்தொகை அபிவிருத்திக் கற்கைநெறி
5. பிரதேச திட்டமிடல் கற்கைநெறி

மேலும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கற்கைநெறிகளை மேற்கொண்டு பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்களிடமிருந்து மீள்பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பொதுநிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறி
2. நூலக தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறி

உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 10.11.2008இற்கு முன்னர் பட்டப்பின் படிப்புகள் பீட அலுவலகத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இதேவேளை வவுனியா வளாக மாணவர்கள் தமது பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை வியாபாரக் கற்கைகள் பீடத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

**பதில் பதிவாளர்.**
20.10.2008

(சி/555619)

# இலங்கை மீனவர்கள் 10 பேர் தூத்துக்குடி அருகே கைது

தூத்துக்குடி,ஒக்.22

தூத்துக்குடிக்கு அருகே இந்திய கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 10 பேர் இந்திய கடற்படையால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களின் இரு படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்திய கடலோரக் காவல்படை கப்பல் 'அருணா அஷப் அலி'யின் தளபதி ஸ்ரீமன் நாராயணா தலைமையில் படையினர் ஞாயிறன்று ரோந்து சென்றனர் எனவும் தூத்துக்குடியிலிருந்து 77 கடல் மைல் (கீழக் கரையிலிருந்து 44 கடல் மைல்) தொலைவில் அவர்கள் சென்றபோது அங்கு இரு மோட்டார் படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 10 இலங்கை மீனவர்களைப் பிடித்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியக் கடல் பகுதியில் அத்துமீறி மீன் பிடித்த குற்றத்திற்காக அவர்களைத் தாங்கள் கைது செய்தனர் எனவும் அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டன எனவும் மீனவர்களின் பெயர், விவரம் குறித்து விசாரிக்கப்பட்டு வருவதுடன் அவர்கள் அனைவரும் தூத்துக்குடிக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் எனவும் கடற்படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (சி)

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள் தேர்தல் அபேட்சகர்களுக்கும் வாக்காளர்களுக்குமான அறிவித்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள் தேர்தல் எதிர்வரும் 26.10.2008 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நடைபெறும். குறித்த தேர்தல் வலி.தென்மேற்குப் பிரதேச செயலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க அங்கத்தவர்களின் வேண்டுகோளுக்கமைய மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் தேர்தல் நடைபெறும் என்பதனை அறியத்தரப்படுகின்றது.

| | |
|---|---|
| தேர்தல் திகதி | : **26.10.2008 ஞாயிற்றுக்கிழமை** |
| இடம் | : **மானிப்பாய் மெமோறியல் கல்லூரி** |
| நேரம் | : **காலை 9 மணிமுதல் ந.ப.12 மணிவரை** |

கௌரவ செயலாளர்,
*மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கம்.* (79387)

*திருமதி ரூபினி வரதலிங்கம்,*
*தேர்தல் அதிகாரி, பிரதேச செயலர்,*
*பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.*



## தீபாவளி சிறப்புத் தள்ளுபடி!
## 5 % முதல் 10 % வரை
## விசேட கழிவு...!

சகல விதமான LG உபகரணங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் * T.V. * சலவை இயந்திரம் * அதிகுளிரூட்டி (De-Freezer) * ஏயா கொண்டிசன் மற்றும் வீட்டு மின்சார பாவனைப் பொருள்கள் இவை அனைத்தையும்

20.10.2008 முதல் 27.10.2008 வரை அபான்ஸ் லிமிட்டெட்டின் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.


ABANS Ltd இன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

LG

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For Abans

141, Power House Road, Jaffna.
94 (6) Stanley Road, Jaffna.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
05 ★ 06 ★ 1931

உதிர்வு
22 ★ 09 ★ 2008

## திருமதி சின்னத்தம்பி மகேஸ்வரி

**"இழப்பின் வலி அறிந்தோம்"**

*உம் உயிரின் வேர் அறுந்து*
*உம் இருப்பைத் தொலைத்து*
*மாதமொன்று ஆனதம்மா!*
*இதயத்து அறைகள் வெறுமையாய் துடிக்க*
*கலங்கித் தவிக்கின்றோம் உம் மக்கள் இங்கு*
*அம்மம்மா எங்கே என்று ஆற்றாமல்*
*அரற்றுகின்றார் - உம் பேரப்பிள்ளைகள்*

*எதைச் சொல்லி ஆற்றுவோம் அவர்கள் துயர் தீர*
*எதைச் சொல்லி ஆறுவோம் எம் துயர் தீர*
*மாதமென்ன மறைந்தாலும் - எம்*
*உள்ளம் உமை மறவாதே - உம்*
*ஆத்மாசாந்தி பெற நிதம் நாம்*
*பரமன் அருளை வேண்டி நிற்கிறோம்.*

22.09.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி சின்னத்தம்பி மகேஸ்வரியின் மரணச்செய்தி அறிந்து எமது துயரில் பங்கெடுத்த யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம், பரியோவான் கல்லூரி, புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், உப அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் அருட்சகோதரிகள், ஆசிரிய நண்பர்கள், யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீட மாணவர்கள், யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழக அங்கத்தவர்கள், உற்றார், உறவினர், அயலவர், ஏனைய நண்பர்கள், மலரஞ்சலி செலுத்தியோர் மற்றும் பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தோர், தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (22.10.2008) புதன்கிழமை 12 மணிக்கு கணபதி கலாசார மண்டபம், அத்தியடி, யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (79230)

*இல.09, பலாலி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**கணவர், பிள்ளைகள், மருமக்கள்.**

## ஓராண்டு நினைவுநாள்

மண்ணகம்
13 • 03 • 1934



விண்ணகம்
23 • 10 • 2007

அமரர்
## செல்லையா செல்வரட்ணம்

***'உயிர்ப்பும் உயிரும் நானே***
***என்னில் விசுவாசம் கொள்பவன்***
***இறப்பிலும் உயிர் வாழ்வான்'***

ஓராண்டு ஓடி மறைந்திற்றோ
ஒரு யுகமாய் தோன்றுதப்பா!
உம் பிரிவு எம் நெஞ்சத்தில்
கூரான ஈட்டி கொண்டு குத்திட
கணப்பொழுதில் தீராத சோகத்தில்
நாம் தவிக்க நீர் சென்றீரோ!

களித்திருந்த எம் சிரிப்பைக் காலன்
கவர்ந்து சென்று இன்று கழிகிறதே
ஓராண்டு கண்ணீரில் நாம் குளித்து
கொண்டுள்ளோம் உம் நினைவை
கடைசி வரை நாம் மறவோம்
கடவுளடி சேருமப்பா.

*அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (23.10.2008) வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு புனித அடைக்கல அன்னை (O.L.R) ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**பி.கு.:** *கொழும்பு வெள்ளவத்தை புனித லோறன்ஸ் ஆலயத்தில் மாலை 6.15 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.*

*த.முகவரி:*
*[illegible] வீதி,*
*[illegible]பாணம்.* (79085)

*நி.முகவரி:*
*கண்டி வீதி,*
*மிருசுவில்.*

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி சுன்னாகம் மேற்றரக் கிளையில் இன்று தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திரத் திறப்பு விழா

## சிறப்பு மலர்- 22.10.2008

### சிகரத்தில் இன்று சுன்னாகம் இலங்கை வங்கி



இலங்கை வங்கியில் பணியாற்றிய காலத்தில் சுன்னாகம் கிளையுடன் நல்ல தொடர்புகள் எனக்குக் கிட்டின.

அந்தக் கிளை திறப்பு விழாவில் பங்குபற்றியதுடன் அந்தக் கிளைக்கான புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நடும் பாக்கியத்தையும் பெற்றேன். அந்த வகையில் திறப்பு விழாவன்று கலந்துகொள்ளும் அதிர்ஷ்டம் எனக்கு அமைந்தது.

புத்தூர் கமநல சேவை நிலையக்கிளை சுன்னாகம் கிளையுடன் இணைக்கப்பட்டபோது கடன் வழங்கும் உத்தியோகத்தராக நான் இங்கு கடமையாற்ற நேர்ந்தது. என் வங்கி வாழ்வில் இது ஒரு மறக்கமுடியாத கட்டம் என்றே சொல்லவேண்டும். அப்போது திரு.க.கனகரட்ணம் அவர்கள் முகாமையாளராக இருந்தார்.

கடன் வழங்கலில் நாங்கள் காட்டிய ஆர்வத்தால் வங்கியின் இலாபம் உயர்ந்தது. வங்கி 'B' தரத்திலிருந்து 'A' தரத்துக்கு உயர்ந்தது. அத்துடன் நானும் திரு.கனகரட்ணமும் பதவி உயர்வுகள் பெற்று அவர் முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளராகவும் நான் கந்தளாய் சீனித்தொழிற்சாலைக் கிளை முகாமையாளராகவும் பதவியேற்றோம்.

இக்கிளை எனது வங்கி வாழ்வில் ஒரு மறக்கமுடியாத பக்கம் என்றுதான் சொல்லவேண்டும். இது இப்போது உயர்தரக் கிளையாகப் பரிணமிக்கின்றது. இன்று பணப்பரிமாற்ற இயந்திரமும் இயங்கத் தொடங்குகிறது. மேன் மேலும் இக்கிளை வளர்ந்து இப்பிரதேச மக்களுக்கு உன்னத சேவையாற்ற வேண்டுமெனவும் என்னுடன் இக்கிளையில் பணியாற்றிய தற்போதைய முகாமையாளர் திரு.S.B.அரசகுமார் அவர்களும் ஏனையோரும் உயர்ந்த பதவிகளுக்கு வரவேண்டுமென்றும் மனமார வாழ்த்துகிறேன்.

**க.பாலசுப்பிரமணியம்,**
முன்னாள் உதவிப் பொதுமுகாமையாளர்,
(வடபிராந்தியம்).




### புது மெருகுடன் சுன்னாகம் வங்கிக்கிளை.....



தேசத்தின் வங்கிக் கிளையெல்லாவற்றையும் கணனி வலைப்பின்னலில் பிணைத்து, மக்கள் வாழ்வில் வளம் பெற அரும்பணி ஆற்றிடும் இலங்கை வங்கியின் சுன்னாகக் கிளை, இன்று தனது சேவையில் ஒரு புது மெருகு பெறுகிறது. ஆம்.... சுன்னாகம் மேற்றரக் கிளையில் தன்னியக்க கொடுப்பனவு இயந்திர (A.T.M) வசதி இன்றிலிருந்து ஆரம்பிக்கப்படுகின்றமையையிட்டு, வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகம் மகிழ்கிறேன். வங்கி வாடிக்கையாளர்களின் இன்றைய அவசர, அவசிய தேவைகளை உணர்ந்து, காலத்தின் தேவைக்கேற்ப விரைவான சேவையை வழங்குவதற்கு இது உறுதுணையாய் அமையும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. அந்த வகையில் சுன்னாகக் கிளையின் முகாமையாளரதும் ஊழியர்களதும் ஓயாத, அயராத முயற்சியைப் பாராட்டுவதுடன், இன்று ஆரம்பிக்கப்படும் இச்சேவை எம் மண்ணினதும், மக்களினதும் தேவையைப் பூர்த்திசெய்ய அனைத்து வகையிலும் உதவிட வேண்டி, எல்லாம் வல்ல இறை யருளை இறைஞ்சி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**என்.சிவரட்ணம்,**
செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி, வட பிராந்தியம்.

### சேவை மேலும் வளம்பெற வாழ்த்துகின்றேன்



மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் வங்கிகள் இன்று பெரும்பங்காற்றி வரும் இந்நாளில் நாடுதழுவிய வகையில் இலங்கை வங்கியின் சேவை இன்று பாரியளவில் விரிவுபடுத்தப்பட்டு செயற்பட்டு வருகின்றமை வரவேற்கத்தக்கதொன்றாகும்.

இலங்கை வங்கியின் சேவையைச் சுன்னாகம் வாழ் மக்களும் பெறுவதற்கான ஓர் அரிய வாய்ப்பாக இயங்கி வரும் இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளையானது உடுவில் பிரதேசம் முழுமைக்கும் சிறந்த சேவையாற்றி வருவது நாம் அறிந்ததே.

அந்த வகையில் சுன்னாகம் இலங்கை வங்கியின் சேவையானது கடந்த வருடம் வலைப்பின்னலமைப்புடன் விரிவுபடுத்தப்பட்டு ஓராண்டு பூர்த்தியின் முன்பாக மக்கள் அனைவரும் 24 மணி நேரமும் தமது சேவையை பெறக்கூடிய வகையில் இலத்திரனியல் பணபரிமாற்று அட்டைத் திட்டமானது ஆரம்பிக்கப்படுவது எமது பிரதேச மக்களுக்குக் கிடைத்த பெருவாய்ப்பு என்றே கூறலாம்.

தேவைக்கேற்ப சிறந்த நவீனத்துவத்தை உடனுக்குடன் புகுத்தி சிறந்த சேவை அளிப்பதில் முன்னணி வகிக்கும் வங்கியாகத் திகழும் சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளையின் செயற்பாடுகள் மேலும் வளம்பெற வாழ்த்துகின்றேன். வாழி!

**எஸ்.மஞ்சுளாதேவி,**
பிரதேச செயலர், உடுவில்.

### இன்றைய இயந்திரமயமான நகர்வுகளுக்கேற்ப இலங்கை வங்கி சுன்னாகக் கிளையும்...



இன்றைய நாளின் சிறப்புமிக்க தன்னியக்க காசுப் பரிமாற்ற இயந்திரத்தின் தொடக்க விழாவானது நமது சுன்னாகம் பட்டினமும் சூழலையும் சார்ந்த மக்களை இலங்கை வாழ் சகல வங்கி வாடிக்கையாளர்களையும் போல் உலகுடன் இணைக்கும் செயற்பாடாகும்.

எல்லா விதமான சேவைகளுடன் இன்புற்று சிறப்புப்பெற்ற உங்களை இலங்கைவங்கி சுன்னாகம் மேற்றரக்கிளை பணப் பரிமாற்றங்களுடன் தொடர்புபடுத்தி இன்றைய கால இயந்திர வாழ்க்கையில் இருந்து இலகுபடுத்தி வீணாக விரயமாகும் நேரத் தையும் சேமிக்க உதவிடும்.

இன்றைய செயற்பாட்டின் பலனைப் பூரணமாக அனுபவித்து மகிழ்ச்சியுடன் உங்கள் தொடர்புகளை எம்முடன் பிணைத்துப் பயன்பெற எனதும் வங்கி அலுவலர்கள் சகலரினதும் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**சி.பெ.அரசகுமாரன்,**
முகாமையாளர், இலங்கை வங்கி சுன்னாகம் மேற்றரக் கிளை.

### வட புலத்தில் புதியதோர் பரிணாமத்துடன் இலங்கை வங்கி



யாழ். மண்ணின் அனைத்துக் கிளைகளையும் கணனி மயப்படுத்தி, அண்மையில் புதியதோர் பரிணாமம் பெற்ற நமக்கு, இன்று மீண்டும் ஒரு புதுப் பொலிவு, புதுமெருகு அனைத்து வளங்களையும் சிறப்புக்களையும் கொண்ட சுன்னாகம் நகரின் மத்தியில் தனிப்பொலிவுடன் திகழும் எமது சுன்னாகம் கிளை, இன்று தன்னியக்கக் கொடுப்பனவு இயந்திர வசதியை ஆரம்பித்து வைக்கின்றது.

நான் ஓய்வுபெற்றுச் செல்ல இருக்கும் இவ்வேளையில் எமது வாடிக்கையாளர்களதும், மக்களதும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு புதிய உத்வேகத்தை எமது சுன்னாகம் கிளைக்கு அளிக்க முடிந்ததையிட்டு மகிழ்வடைவதுடன், எனது இதய பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

மீளப்பெற முடியாத செல்வமாகிய காலத்தைச் சேமிக்கவும், விரைவான, திருப்தியான சேவையைப் பெற்றுக் கொள்ளவும், எமது வாடிக்கையாளர்களுக்கு உறுதுணையாய் இது அமையும் என்பது திண்ணம். வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் என்ற வகையில், இச்சேவை சிறக்க, சுன்னாகம் மேற்றரக்கிளை உத்தியோகத்தர்களினதும் முகாமையாளரதும் அயராத பணி என்றும் தொடர அகம் மகிழ்ந்து வாழ்த்தி அமைகின்றேன்.

B.A.**அருமைநாயகம்**, உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி, வட பிராந்தியம்.


**JEYA KRISHNA**
No: 20, K.K.S.Road,
Chunnakam.
T.P.: 222 5321

**சிறி ஸ்ரோர்ஸ்**
34, சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
&
**சுஜீவாஸ் கிறீம் ஹவுஸ்**
Dr.சுப்பிரமணியம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக)
சுன்னாகம்.

**Hi- Tech Electronics & Phone Shop**
No.: 53, K.K.S. Road,
Chunnakam.

**புகழ் களஞ்சியம்**
பல்பொருள், ஷெல்காஸ்
விற்பனையாளர்கள்
No.:9,K.K.S.Road,
Chunnakam.

**துர்க்கா பொத்தக சோலை**
புகழ்பெற்ற புத்தக விற்பனையாளர்களும்
மற்றும் பாடசாலை உபகரணங்கள்,
புதினப்பத்திரிகைகள், கலண்டர்கள்,
வழங்குநர்களும்
WESTERN UNION பணப்பரிமாற்றம்
Bus Stand, Chunnakam.

**ROSHAN RESTAURANT**
(Appd by Ceylon Tourist Board)
T.P.No.: 021 222 5388
No: 138, Sir P.Ramanathan Road,
K.K.S.Road, Chunnakam.

**SANRAJ COMPLEX**
Tele Service- Fax, Laminating
Stationery, Sweet mart.
T.P.No.: 021 222 5388
No.: 138- Sir P.Ramanathan Road,
(K.K.S. Road,
Chunnakam).

**ஆனந்தகி புடைவையகம்**
**Anandahi Tex**
31 A, மத்திய சந்தை,
சுன்னாகம்.

**Equip Unit Trust**
160 C, K.K.S.Road,
Chunnakam.

**முருகன் வேலான் களஞ்சியம்**
Murugan Velaan Stores,
K.K.S. Road, Chunnakam.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
இல.28, சந்தை உட்புறம்,
சுன்னாகம்.

**துவாரகன் ஹாட்வெயார்**
ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.
தொ.பே. 021 4591833

**விதுசன் ரேடர்ஸ் கம்பனி**
K.K.S.Road, Chunnakam.
0776972231

**THAVAM STORES**
தவம் களஞ்சியம்,
உடுவில்.

**Kathirkamasingam & Sons**
Alaveddy South, Alaveddy.

**P.C.POWER UNIT**
356B, Kasthuriyar
Road, Jaffna

**சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
Chunnakam M.P.C.S.
(Ltd),
K.K.S. Road, Chunnakam.

**சிறி கணேசா ரெக்ஸ்**
பேபி சூட், பேபி கவுண், சேட், ஜீன்ஸ்,
ஸ்கேட் & பிளவுஸ், சாறி
இவை அனைத்தையும் பெற்றுக்
கொள்ளலாம்.
நவீனசந்தை வெளிப்புறம்,
சுன்னாகம்.

**ஸ்ரீகரன் புக் சென்ரர்**
பாடசாலை உபகரணங்கள்,
போட்டோக் கொப்பி,
லெமினேற்றிங் பெற்றுக்
கொள்ளலாம்.
K.K.S.Road, Chunnakam.

**SUNDARSON**
Jaffna Road. Manipay.
Suntel- 021 4591569
T.P.: 2222751

**THABOTHARAN**
GLASS, ALUMINIUM,
PHOTO FRAMING.
No.:57, K.K.S. Road,
Chunnakam.

**திருக்குமரன்**
கட்டடப் பொருள்கள்
விற்பனை நிலையம்,
இல.9, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

**Vasantiya Electricals**
No.:100, K.K.S.Road, Chunnakam.

**FINE SELECTION**
அன்பளிப்புப் பொருள்கள்,
அழகு சாதனப் பொருள்கள் மற்றும்
எலெக்ரோனிக் உபகரண
வகைகளுக்கு
நாடவேண்டிய இடம்
No.: 77, K.K.S.Road,
Chunnakam.

**NEW TRUST BOOK PARK**
107, K.K.S.Road,
Chunnakam.

(சி/555625)

**A.T.M.வசதியுடன் புது மெருகு பெறும் இலங்கை வங்கி சுன்னாகம் மேற்றரக் கிளையின் சேவை சிறக்க வாழ்த்துகின்றோம்.**
**-வாடிக்கையாளர்களும் நலன் விரும்பிகளும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.விளையாட்டுத் துறையை தேசிய மட்டத்தில் மீண்டும் மிளிரச் செய்வதே எனது எதிர்கால இலக்கு

## தங்க மங்கை தனுஷா செவ்வி

பாடசாலைகளுக்கிடையேயான தேசிய மட்டப் போட்டிகளில் 17 வயதின் கீழ்க் கோலூன்றிப் பாய்தல் நிகழ்வில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று யாழ்.மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர் செல்வி தனுஷா சண்முகராசா. விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இவர், அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் மாணவி. தனது விடாமுயற்சியால் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற அவரது செவ்வி உதயன் வாசகர்களுக்காக இங்கு தரப்படுகிறது.

**கே:** நீங்கள் கோலூன்றிப் பாய்தல் விளையாட்டில் எத்தனை வயதிலிருந்து ஈடுபட்டு வருகிறீர்கள்?

**ப:** நான் 15 வயதிலிருந்து இத்துறையில் ஈடுபட்டுள்ளேன். ஆரம்பத்தில் உயரம் பாய்தலிலேதான் நான் கவனம் செலுத்தியபோதும் எமது உடற்பயிற்சி ஆசிரியர் சுபாஷ்கரன் தான் கோலூன்றிப் பாய்வதற்கு என்னை நெறிப்படுத்தினார்.

**கே:** நீங்கள் தேசியமட்டத்தில் முதலிடம் பெற உதவியவர்கள் யார்?

**ப:** எனது பெற்றோர் எப்போதும் உறுதுணையாக இருந்தனர். விளையாட்டுத் துறை ஆசிரியர்களான சுபாஷ்கரன், வாகீஸ்வரன் ஆகியோர் போதிய பயிற்சியளித்தனர். அதிபரும் நான் ஒழுங்காகப் பயிற்சிக்கு வருகிறேனா என்பதை அவதானித்தும், அறிவுரைகள் கூறியும் வழிகாட்டினார். இவற்றோடு முதலிடம் பெறவேண்டும் என்ற எனது மனவைராக்கியமும் வெற்றிக்குக் காரணமாகும்.

**கே:** கொழும்பு முதலிய வசதி வாய்ப்புகள் நிறைந்த மாவட்ட மாணவர்களையும் விஞ்சி நீங்கள் திறமையை வெளிப்படுத்துவதற்கு எத்தகைய பயிற்சிகள் பாடசாலையில் வழங்கப்பட்டன?

**ப:** எமது உடலை உறுதி செய்ய, பயிற்சி நேரத்தில் கடலை போன்ற சத்துணவுகள் தரப்பட்டன. ஒலிம்பிக்போட்டி முதலிய சர்வதேசப் போட்டிகளில் இடம்பெற்ற கோலூன்றிப் பாய்தல் தொடர்பான CDக்களைப் போட்டுக்காட்டி அவற்றிலுள்ள நுட்பங்களைச் சொல்லித் தந்தார்கள். இது எங்களுக்குப் பல விடயங்கள் அறிய உதவியது. எமக்குரிய விளையாட்டு உபகரணங்களையும் கொழும்பிலிருந்து பெற்றுத் தந்தார்கள்.



**கே:** முதலிடம்பெற்றபோது உங்கள் மன நிலை எவ்வாறு இருந்தது?

**ப:** என் வாழ்விலேயே அதியுன்னத தருணமாக முதலிடம் பெற்ற நேரத்தில் உணர்ந்தேன்.

**கே:** தேசிய மட்டத்தில் வாகை சூடிய உங்களுக்கு பாடசாலை சமூகத்திடமிருந்து எத்தகைய வரவேற்பு கிடைத்துள்ளது?

**ப:** கடந்த செவ்வாய்க்கிழமை எனக்குப் பாராட்டுவிழா நடைபெற்றது. வெளிநாட்டிலுள்ள பழைய மாணவரான ச.கேதீஸவரன் என்பவர் எனக்கும், பாடசாலைக்கும் தலா 50,000 ரூபா அனுப்பியுள்ளார்.

**கே:** விளையாட்டுத்துறையில் ஈடுபடும் மாணவரிடம் எத்தகைய பண்புகள் இருக்கவேண்டுமென உணர்ந்திருக்கிறீர்கள்?

**ப:** வெற்றிதோல்வியைச் சமமாக மதித்தல், விடாமுயற்சி, ஆசிரியர்களின் அறிவுரையைக் கேட்டு நடத்தல் என்பவையே வீரர்களுக்கு அவசியமான பண்புகள். இவற்றைக் கடைப்பிடித்தால் வெற்றி நம்மைத் தேடிவரும். எனது வெற்றிக்கும் இவையே காரணம்.

**கே:** உங்களது எதிர்கால இலட்சியம் என்ன?

**ப:** யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த உடற்பயிற்சி ஆசிரியராக வருவதே எனது எதிர்கால இலட்சியமாகும். தேசியமட்டப் போட்டிகளில் தொடர்ந்து பங்குபற்றவும், சர்வதேச ரீதியாக எனது திறமைகளை வெளிப்படுத்தவும் ஆர்வங்கொண்டுள்ளேன்.

செவ்வி: ம.பா.மகாலிங்கசிவம்



பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ்.கோட்ட மட்டத்தில் 14 வயது, 18 வயதுப் பிரிவுகளில் யாழ்.இந்துக்கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. கல்லூரி அதிபர், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர் ஆகியோருடன் சம்பியன் பட்டத்தை வென்ற இரு அணிகளின் வீரர்களும் அமர்ந்திருப்பதைப் படங்களில் காணலாம். (04)

## உதைபந்தாட்ட இறுதியாட்டங்கள்

வடமராட்சி,ஒக்.22

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று புதன்கிழமை காலை 8 மணி முதல் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் வடமராட்சி உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.வல்லிபுரம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா கலந்து கொள்வார்.

ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

*16 வயது* – நெல்லியடி ம.ம.வித்தி. எதிர் தேவரையாளி இந்துக் கல்லூரி.

*18 வயது*– நெல்லியடி ம.ம.வித்தி எதிர் கொற்றாவத்தை அ.த.க.பாடசாலை. (50)

குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# 2008ஆம் ஆண்டின் சிறந்த தடகள வீரர்கள்




வலி.வடக்கு,ஒக.22

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட விளையாட்டுப் பிரிவு நடத்திய தடகளப் போட்டிகளில் சிறந்த தடகள வீரர்கள், வீராங்கனைகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

2008ஆம் ஆண்டின் சிறந்த தடகள வீரராகச் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கே.ரஜீம்ராஜ் தெரிவுசெய்யப்பட்டார்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த எம்.மோசாந்தி 2008ஆம் ஆண்டில் சிறந்த தடவீராங்கனையாகவும் வேலணைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த எஸ்.ரேகா சிறந்த கள வீராங்கனையாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் வீரர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களை வழங்கிக் கௌரவித்தார். (50-86)

# சண்டிலிப்பாய் கோட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்களின் தடகளப் போட்டி முடிவுகள்

வலி. வடக்கு, ஒக்.22

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகளின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற தடகளப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

**ஆண்கள் பிரிவு**

* ***100 மீற்றர் ஓட்டம்:*** ச.காதேஷ் (மானிப்பாய் சென்.ஆன்ஸ் வித்தியாலயம்), உ.லகீஸ்கான்(சங்கானை கிழக்கு விக்கினேஸ்வரா விததியாலம்), இ.வைஷ்ணவன் (மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்).
* ***75 மீற்றர் ஓட்டம்:*** ச.காதேஷ் (மானிப்பாய் சென்.ஆன்ஸ் வித்தியாலயம்), இ.வைஷ்ணவன்(மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்), ஜெ.துவாரகன்(நவாலி மகாவித்தியாலயம்).
* ***பந்து எறிதல்:*** ஜெ.குமரேஸ்வரசர்மா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ர.சௌமியன்(சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), கி.தனுஷன் (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்).
* ***நீளம் பாய்தல்:*** ஜெ.துவாரகன் (நவாலி மகா வித்தியாலயம்), சி.நிரஞ்சன் (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்) கு.வினிதன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).
* ***உயரம் பாய்தல்:*** த.டிஷாந்தன் (சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்), அ.டக்சன் (பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை), டலஸ் கனிஷ்ரன்(நவாலி மகா வித்தியாலயம்).
* ***4x100 அஞ்சலோட்டம்:*** சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, மாதகல் சென்.தோமஸ் வித்தியாலயம், நவாலி சென்.பீற்றர்ஸ் வித்தியாலயம்.

**பெண்கள் பிரிவு**

* ***75 மீற்றர் ஓட்டம்:*** செ.மேரி நிலக்சனா (இளவாலை கன்னியர் மடம் ம.வி), ம.வித்தியா (பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயம்), தி.மேரிசுகந்தா (மானிப்பாய் சென்.ஆன்ஸ் வித்தியாலயம்).
* ***100 மீற்றர் ஓட்டம்:*** செ.மேரிநிலக்சனா (இளவாலை கன்னியர் மடம் ம.வி), ம.வித்தியா (பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயம்), த.கஜரனி (இளவாலை மாரீசன் கூடல் கத்தோலிக்க பாடசாலை).
* ***பந்து எறிதல்:*** பா.மாதங்கி (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்), த.றஜிதா (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), ஜெ.சசிதா (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)
* ***நீளம் பாய்தல்:*** செ.மேரிநிலக்சனா (இளவாலை கன்னியர்மடம் ம.வி.), அ.மரியராஜி (சில்லாலை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை), ம.வித்தியா (பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயம்)
* ***உயரம் பாய்தல்:*** யோ.நிஷாந்தினி (நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயம்), ப.நிதர்சிகா (ஆனைக்கோட்டை றோமன். கத்தோலிக்கப் பாடசாலை), யே.மேரிலூட்ஸ் (மாதகல் சென்.தோமஸ் வித்தியாலயம்).
* ***4x100 மீற்றர் அஞ்சலோட்டம்:*** பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி (50-86)

## மாவட்ட கூடைப்பந்தாட்ட அணித்தெரிவு

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியினைத் தெரிவுசெய்வதற்கான பயிற்சிகள் யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இப் பயிற்சியில் கலந்துகொள்ள விரும்பும் வீரர்கள், வீராங்கனைகளை வருகை தருமாறு சங்கச் செயலாளர் ர.சிறிரமணன் கேட்டுள்ளார்.

## சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அசத்தியது!

வருடந்தோறும் மானிப்பாய் இந்துக் கல்லூரியினால் நடத்தப்பட்டு வரும் சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியின் இந்த வருடத்துக்கான ஆட்டங்கள் நடைபெற்று முடிந்துள்ளன.

சென்.ஜோன்ஸ் கல்லூரியுடன் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகளில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் 20 வயதின்கீழ் அணியும், 18 வயதின்கீழ் அணியும் வெற்றி பெற்றன. 16 வயதின்கீழ் அணிகள் மோதிய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரியுடன் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகளில், மானிப்பாய் இந்துக்கல்லூரியின் 14 வயதின்கீழ் அணி வெற்றி பெற்றுள்ளது. 18 வயதின்கீழ் அணிகள் மோதிய ஆட்டம் சமநிலையில் நிறைவு பெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியுடன், யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகளில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் 14 வயதின் கீழ் அணியும், 16 வயதின் கீழ் அணியும், 18 வயதின்கீழ் அணியும் வெற்றி பெற்றுள்ளன. (04)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 320 ஓட்டங்களால் ஆஸியை வீழ்த்தியது இந்தியா!

இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக் கிடையில் மொகாலியில் நடைபெற்றுவந்த இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி


விக்கெட்டுகளை வீழ்த்திய ஹர்பஜன் சிங்கை பாராட்டும் சக வீரர்கள்

யில் இந்திய அணி 320 ஓட்டங்களால் அசத் தலான வெற்றியைப் பெற்றது.

இதன்மூலம் 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் தற்போது இந்தியா 2 - 1 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது.

இந்தப் போட்டியின் நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலிய அணி இந்திய அணியை விட மொத்தமாக 374 ஓட் டங்கள் பின்தங்கிய நிலையில் இருந்தது. அந்த அணிக்கு கைவசம் 5 விக்கெட்டுக்கள் மாத்திரமே மீதமிருந்தன. இந்த நிலையில் நேற்றுக்காலை தனது ஆட்டத்தைத் தொடர்ந்த ஆஸி. அணி, ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே மளமளவென்று விக்கெட் டுகளைப் பறிகொடுத்தது. எப்படியாவது வென்று விடவேண்டும் என்ற எதிர்பார்ப்பு டன் களமிறங்கிய இந்திய அணியை, சகீர் கானும், மிஷ்ராவும் வெற்றிநோக்கி அழைத் துச்சென்றனர்.

முன்னதாக இந்த டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித் தது. அந்த அணியின் வீரர்களான சௌரவ் கங் குலி 102 ஓட்டங்களையும், மகேந்திரசிங் டோனி 92 ஓட்டங்களையும் சச்சின் டெண் டுல்கர் 88 ஓட்டங்களையும் குவித்து தமது அணியை வலுவானநிலைக்கு இட்டுச்சென்றனர்.

469 ஓட்டங்களை சேர்த்திருந்த நிலையில் இந்தியா ஆட்டமிழந்தது. அவுஸ்திரேலிய அணி சார்பாக ஜோன்சன், சைடில் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் வைற் இரு விக் கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களம் புகுந்த அவுஸ்திரேலிய அணி 268 ஓட்டங் களுக்குள் சுருண்டது. அதிகபட்சமாக வட்சன் 78 ஓட்டங்களையும் மைக் ஹஸி 54 ஓட்டங் களையும் பெற்றனர். இந்திய அணி சார்பாக அணித் தலைவர் கும்ப்ளேக்குப் பதிலாக களம் இறக்கப்பட்ட அறிமுக வீரர் மிஷ்ரா அபாரமாகப் பந்து வீசி ஐந்து விக்கெட்டுகளைச் சாய்த்தார். இஷாந்த் சர்மா, ஹர்பஜன் சிங் ஆகியோரும் தமது பங் கிற்கு தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.






முதல் இன்னிங்ஸில் 201 ஓட்டங்கள் முன் னிலை வகித்த இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் மூன்று விக்கெட்டுகளை மாத்திரமே இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. கௌதம் கம்பீர் (104), ஷேவாக் (90), டோனி (68) ஆகியோர் இரண் டாவது இன்னிங்ஸிலும் அதிரடியாக ஓட்டம் குவித்து இந்திய அணியை மிகவும் ஸ்திர மான நிலைக்கு இட்டுச்சென்றனர். இரு இன் னிங்ஸ்களிலும் மொத்தமாக 515 ஓட்டங்கள் முன்னிலை வகித்தது இந்தியா. இந்த இமாலய இலக்கைத் துரத்தமுயன்ற அவுஸ்திரேலிய வீரர்கள் அடுத்தடுத்து வெளியேறினர். ஐந்தாம் நாளான நேற்று சொற்ப நேரத்துக்குள் ஐந்து வீரர்கள் பவிலியன் திரும்பினர். இரண் டாவது இன்னிங்ஸில் மைக்கல் கிளார்க் மாத்திரமே (68) அரைச்சதம் கடந்தார். வெறும் 195 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டு களையும் இழந்து 320 ஓட்டங்களால் தோல்வி கண்டது ஆஸி.

இந்திய அணி சார்பாக சிறப்பாகப் பந்து வீசிய ஹர்பஜன் சிங், சகீர் கான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் இஷாந்த் சர்மா, மிஷ்ரா ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக இந்திய அணியின் மகேந்திர சிங் டோனி தெரிவானார். (சி)

# அடுத்த இரு போட்டிகளுக்கும் இந்திய அணியில் மாற்றமில்லை

மொகாலி, ஒக். 22

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான அடுத்த இரு டெஸ்ட் போட்டிகளுக்கான இந்திய அணியில் மாற்றம் எதுவும் செய்யப்பட வில்லை.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடரில் பெங்களூரில் நடந்த முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது. மொகாலியில் நடந்த இரண்டாவது டெஸ்டில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது. அடுத்த இரு போட்டிகளுக்கான இந் திய அணியை இந்திய கிரிக்கெட் சபைச் செயலாளர் என்.ஸ்ரீனிவாசன் அறிவித்தார்.

கடந்த போட்டியில் பங்கேற்ற இந்திய அணியில் எந்தவித மாற்றமும் செய்யப்பட வில்லை. கும்ப்ளே காயம் அடைந்ததைத் தொடர்ந்து அணியில் சேர்க்கப்பட்ட அமித் மிஸ்ரா அணியில் நீடிப்பார் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. அவருக்குப் பதிலாக ஷிதான்யா நந்தா சலஞ்சர் போட்டிக்கான அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

3 ஆவது டெஸ்ட் போட்டி டில்லியில் எதிர்வரும் 29 ஆம் திகதி தொடங்குகிறது. 4 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நாக்பூரில் நவம்பர் 6 ஆம் திகதி ஆரம்ப மாகிறது.

இந்த இரு போட்டிக்கான இந்திய அணி வீரர்கள் வருமாறு :-

கும்ப்ளே (கப்டன்), ஷேவாக், கௌதம் கம்பீர், ராகுல் டிராவிட், டெண்டுல்கர், வி.வி.எஸ்.லட்சுமண், கங்குலி, டோனி, ஹர்பஜன் சிங், சகீர்கான், இஷாந்த் சர்மா, அமித் மிஸ்ரா, ஆர்.பி.சிங், பத்ரிநாத், முனாப் பட்டேல். (த)

# மீண்டும் களம் இறங்குகிறார் சானியா!

இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, மணிக்கட்டுப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக, பீஜிங் ஒலிம்பிக் ஒற்றை யர் முதல் சுற்றிலேயே விலகினார்.

அதற்குப் பின் 2 மாதங்களுக்கு மேலாக எந்தத் தொடரிலும் அவர் பங்கேற்கவில்லை.

இது குறித்து பேட்டி அளித்த சானியா கூறு கையில், "மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியது. எனது டென்னிஸ் வாழ்க்கையை கேள்விக்குறியாக் கியது. கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங்கின் ஆலோசனைப்படி, தற்போது ஜேடின் சவுத்ரியிடம் சிகிச்சை பெற்று வருகிறேன். அடுத்த ஆண்டு ஜன வரியில் ஹொங் கொங்கில் நடக்கும் கிளாசிக் டென்னிஸ் தொடரில் பங்கேற்கத் திட்டமிட்டுள்ளேன்" - என்றார்.



# அடுத்த டெஸ்டில் சைமண்ட்ஸ்?



இந்தியாவுக்கு எதிரான அடுத்த டெஸ்ட் போட்டிகளில் அவுஸ் திரேலிய அணியில் அன்ட்ரூ சைமண்ட்ஸ் இடம்பிடித்துள்ளார். இது தொடர்பாக அந்த அணியின் நிர்வாக அதிகாரி கூறியவை வருமாறு:-

அவுஸ்திரேலியாவின் சைமண்ட்ஸ் மறுபடியும் கிரிக்கெட் விளை யாடுவது மகிழ்ச்சியான செய்தியாகும். அவருடன் நானும் அவுஸ்தி ரேலிய அணி வீரர்களும் பழகியுள்ளோம். கடந்த ஆண்டு அவர் தன் னுடைய கடமையை உணர்ந்து செயற்படவில்லை. தற்போது தேசிய அணியில் இடம்பெற சைமண்ட்ஸ் முயற்சிப்பது, திருப்தியாக உள் ளது. இதுகுறித்து தேர்வாளர்கள் ஆலோசனையில் ஈடுபடுவார்கள். இவ்வாறு அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாக அதிகாரி ஜேம்ஸ் சுதர் லாந்து கூறினார். (சி)

# துடுப்பாட்டத்திலும் மிஷ்ரா அசத்துவார்!



மும்பை, ஒக்.22

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்டில் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அமித் மிஸ்ரா துடுப் பாட்டத்திலும் அசத்துவார் என இந்திய அணியின் முன்னாள் சுழல் பந்து வீச்சாளர் பிரசன்னா தெரிவித் துள்ளார்.

இந்திய, அவுஸ் திரேலிய அணிகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் மொகாலியில் நடந்தது. இதில் அறிமுகப் பந்து வீச்சாளராக களமிறங்கிய இந்தியாவின் அமித் மிஸ்ராவின் பந்துவீச்சு பயிற்சியாளராக இருப்பவர் இந்தியாவின் முன்னாள் சுழல்பந்து வீச்சாளர் பிரசன்னா. மிஸ்ரா பந்துவீச்சில் மட்டுமல்ல, துடுப்பாட் டத்திலும் அசத்துவார் என பிரசன்னா கூறினார்.

இது குறித்து அவர் கூறியதாவது, பந்து வீச் சுக்கு சற்றும் ஒத்துழைக்காத முதல் இன் னிங்ஸில் மிஸ்ரா 5 விக்கெட் வீழ்த்தினார். இது எனது எதிர்பார்ப்பை நிறைவேற்றியது. இதில் சாதித்த இந்திய அணி தொடரில் 1 - 0 என முன்னிலை பெற மிஸ்ரா உதவுவார். அவுஸ்திரேலிய அணியினர் அவரை இப்போது தான், முதன்முதலாக சந்தித்துள் ளனர். எனது மற்றொரு வீரர் பியுஸ் காவ்லா வுடன் ஒப்பிடுகையில் மிஸ்ரா துடுப்பாட்டத் திலும் கலக்குவார். தான் சிறந்த சகலதுறை வீரர் என்பதை விரைவில் நிரூபிப்பார். முதல்தர போட்டிகளில் 300க்கும் அதிகமான விக்கெட்டுகள் சாய்த்துள்ள அவரது எதிர்காலம் பிரகாசமாக உள்ளது. கும்ப்ளேயின் இடத்துக்கு சரியான போட்டி ஏற் பட்டுள்ளதாலும், மிஸ்ரா அதனை கெட்டியாக பிடித்துக்கொள்வார்- இவ்வாறு அவர் தெரி வித்தார். (சி)




ஸ்பெயினில் உள்ள மாட்ரிட்டில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மாட்ரிட் ஏடிபி மாஸ்டர்ஸ் தொடர் டென்னிஸ் போட்டியில் பிரிட்டன் வீரர் அண்டி முரே சம்பியன் பட்டம் வென்றார். வெற்றி பெற்றமைக்காக வழங்கப்பட்ட கோப்பை யுடன் அன்டி முரே காணப்படுகிறார். இவர் 6 - 4, 7 - 6 என்ற செட் கணக்கில் ஸ்பெயின் வீரர் ஜைல்ஸ் சைமனை இறுதி ஆட்டத்தில் தோற்கடித்தார். (த)

# டானியல் விற்றோறியின் அபார ஆட்டத்தால் பங்களாதேஷை தோற்கடித்தது நியூஸிலாந்து

பங்களாதேஷ் மற்றும் நியூஸிலாந்து அணி களுக்கிடையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து அணி மூன்று விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

நாணயச்சுழற்சியில் வெற்றியீட்டிய பங்க ளாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலாவது இன்னிங்ஸில் அந்த அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மெஹ்ராப் கொனன் 83 ஓட்டங்களையும் முஷ்பிஹார் ரகீம் 79 ஓட்டங்களையும் பெற்றனர். நியூஸிலாந்து சார்பாக டானியல் விற்றோறி சிறப்பாகப் பந்து வீசி 5 விக் கெட்டுகளை வீழ்த்தினார்.

பேர்கன் 3 விக்கெட்டுக்களையும் படெல் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். பதி லுக்குத் துடுப்பாடக் களமிறங்கிய நியூசி லாந்து அணி பங்களாதேஷ் இளம் வீரர்களின் துல்லியமான பந்து வீச்சுக்கு முகங்கொடுக்க முடியாமல் தடுமாறியது. வெறும் 171 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் தாரைவார்த்தது நியூஸிலாந்து. அந்த அணி சார்பாக பந்து வீச்சில் சாதித்த டானியல் விற்றோறி (55) மட்டுமே துடுப்பாட்டத்திலும் அரைச்சதம் கடந்தார். பங்களாதேஷ் அணி யில் சஹில் அல் ஹசன் 7 விக்கெட்டுகளைச் சாய்ந்து அசத்தினார்.

முதல் இன்னிங்ஸில் 74 ஓட்டங்கள் மேலதிகமாகப் பெற்றிருந்த பங்களாதேஷ் அணி, இரண்டாவது இன்னிங்ஸில் 242 ஓட்டங்களைக் குவித்து வெற்றிக் கனவில் இருந்தது.




7 விக்கெட்டுக்களைச் சாய்த்த அல் ஹஸன் துடுப்பாட்டத்திலும் 71 ஓட்டங்களைக் குவித்தார்.

மொத்தமாக 315 என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங் கிய நியூசிலாந்து அணி 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அந்த அணியில் றெட்மெண்ட் 79 ஓட்டங்களையும் டானியல் விற்றோறி 76 ஓட்டங்களையும் குவித்து அணியின் வெற்றிக்கு வித்திட்டனர்.

பங்களாதேஷ் வீரர் அப்துர் ரஷாக் 3 விக்கெட்டுகளையும் அல்ஹஸன் 2 விக்கெட்டு களையும் கைப்பற்றினார்.

இந்தப்போட்டியின் சிறந்த வீரராக நியூஸிலாந்து வீரர் டானியல் விற்றோறி தெரிவு செய்யப்பட்டார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களின் இராணுவ வலிமை முன் எப்போதும் போலவே மிகப் பலமாக இருக்கிறது - பிரபா

(முதலாம் பக்கத்தின் தொடர்ச்சி)

நக்கீரன் சஞ்சிகை வெளியிட்ட செவ்வி யின் முழு விவரம் வருமாறு:-

ஈழத்தில் நிகழ்ந்து வரும் நெருக்கடியான நிலை குறித்து, பல்வேறு கேள்விகளை அரசியல்துறை பொறுப்பாளர் நடேச னுக்கு ஈ-மெயிலில் அனுப்பி வைத்தோம். நடேசனும் நமது கேள்விகளுக்கான பதில் களை பிரபாகரனோடுஆலோசித்து பதில்க ளாக்கி நக்கீரனுக்கு அனுப்பி வைத்துள் ளார். பிரபாகரனின் மனம் திறந்த பதில்கள் அடங்கிய பேட்டியிலிருந்து...

**கே:** 1980 களுக்குப் பின்னர் தமிழகத்தில் எற்பட்டுள்ள ஈழத் தமிழருக்கு ஆதரவான தற்போதைய எழுச்சியான சூழல் குறித்து?

**ப:** இலங்கைத் தீவில் 1983 காலப்பகுதி யில் சிங்கள அரசபடைகளாலும் பேரின வாத அரசியல் தலைமைகளினாலும் வர லாற்றில் ஒரு போதும் இல்லாதவாறு பெரியதொரு இனப்படுகொலை மேற் கொள்ளப்பட்டது. ஆயிரக்கணக்கான தமி ழர்கள் கொல்லப்பட்டும், தமிழர்களின் கோடிக்கணக்கான சொத்துக்கள் சூறை யாடப்பட்டும், இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் வாழ்விடங்களை விட்டுப் புலம் பெயர்ந்து அகதிகளாக வெளிநாடுகளில் தஞ்சம் கேட்கும் அளவிற்குப் இனப்படு கொலையின் தாக்கம் இருந்தது.

அந்தக் கொடூரங்கள் இன்னும் மறக்க முடியாதவை. இதனைக் கண்டு தமிழக மக்களும் அரசியல் தலைமைகளும் அரசி யல் வேறுபாடுகளுக்கும் அப்பால் கொதித் தெழுந்தனர். அதுபோலவே, இன்றும் சிங் கள அரச படைகள் தனது தரைப்படை, கடற்படை, விமானப் படை ஆகிய முப் படைகளையும் பயன்படுத்தி பாரிய அள

## உலகத் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு தொடர்வதால் இறுதி வெற்றி எங்களுக்குத் தான்

வில் இனப்படுகொலைகளை நடத்தி வரு கின்றன. தினமும் மக்கள் கொல்லப்பட் டும், வாழ் விடங்களை விட்டு அகதிகளாக் கப்பட்டும் தவியாய் தவிக்கின்றனர்.

ஈழத் தமிழர்களுக்கு சொல்லொணா இன்னல்கள், ஆற்றுப்படுத்த முடியாத கொடூரங்கள் ஏற்படுகிற போதெல்லாம் தமிழக மக்கள் கொதித்தெழுவார்கள். அவ் வாறான ஒரு சூழலே தற்போது தாய்த் தமி ழகத்தில் ஏற்பட்டுள்ளதாகவே நாங்கள் பார்க்கிறோம். அந்த எழுச்சியான சூழல் எங்களுக்குப் பலம் சேர்க்கும்.

**கே:** சமீபத்தில் தி.மு.க. நடத்திய சென்னை பொதுக்கூட்டத்தில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான உணர்ச்சிமிக்க உரையை நிகழ்த் தினார் தமிழக முதல்வர் கலைஞர். அதனை அடுத்து, அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, ''இலங்கையில் ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்து வரும் சிங்கள அரசின் யுத்தத்தை நிறுத்த இந்திய அரசு இருவார காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் தமிழக நாடாளுமன்ற எம். பி.க்கள் ராஜினாமா செய்வார்கள்' என்கிற நிலையை எடுத்துள்ளார் கலைஞர். தமிழ கத்தில் ஆளும் தி.மு.க., இத்தகைய ஆதர வான நிலையில் இருப்பது பற்றி?

**ப:** தமிழக முதல்வர் கலைஞர் தமிழ் உணர்வு மிக்கவர். ஈழத் தமிழர்கள் மீது ஆழமான அன்பும், பாசமும் எப்போதும் கொண்டிருப்பவர். அதனை பல சந்தர்ப்பங் களில் நிரூபித்திருக்கிறார். தமிழீழத்தில் சிங்கள அரச பயங்கரவாதம் தலைவிரித்து ஆடிய போதெல்லாம் ஈழத் தமிழ் மக்க ளுக்காக ஓங்கிக் குரல் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் அதனை செயலிலும் காட்டி வருபவர். தற்போது, ஈழத்தில் தமி ழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சொல் லொணாத் துயரம் கண்டு அத்தகைய ஆதர வான நிலைப்பாட்டில் இருப்பது எம்மை யெல்லாம் பூரிப்படைய வைத்துள்ளது. அந்த ஆதரவை நாங்கள் என்றென்றும் எதிர்பார்க்கிறோம்.

**கே:** உங்கள் இயக்கத்தைக் கடுமையாக எதிர்ப்பவரும் இயக்கத்துக்கு தடைவிதிக் கக் காரணமாக இருந்தவருமான ஜெயல லிதா, இருவாரங்களுக்கு முன்பு ஈழப் பிரச் சினையில் ஆதரவான நிலையை எடுத் தார். தற்போது அதை மாற்றிக்கொண் டிருக்கிறார். ஜெயலலிதாவின் மனநிலை யைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**ப:** தற்போது ஈழத்தில் சிங்கள அரசு மேற்கொண்டு வரும் இனப்படுகொலை யின் தாக்கம், முழுத்தமிழகத்தையும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. அரசியல் வேறுபாடுகளை மறந்து தமிழக அரசியல் தலைவர்கள் அனைவரும் எமக்கான ஆதர வுக் குரல் கொடுத்து வருகின்றனர். ஜெயலலி தாவும் ஆதரவுக் குரல் கொடுத்திருக்கிறார். ஆனால், தற்போது அதனைக் மாற்றிக் கொண்டிருக்கிறாரெனில்... அதுபற்றி நாங்கள் என்ன சொல்ல?

**கே:** உங்களின் தற்போதைய தலைநகரான கிளிநொச்சியைப் பிடித்து விடுவோம் என் கிறார் அதிபர் மகிந்த ராஜபக்ஷ. இலங்கை யின் உண்மையான போர்க்களநிலைமை என்ன?

**ப:** இலங்கை அரசு, பல்வேறு வெளி நாடுகளிடமிருந்து ஏராளமான இராணுவ உதவிகளைப் பெற்று வருகிறது. இராணு வத் தளபாடங்களை வாங்கிக் குவிக்கிறது. அதனைக் கொண்டு, தமிழ் மக்களுக்கு எதி ரான இன அழிப்பு போர் ஒன்றை மேற் கொண்டு வருகிறது. அந்த வகையில் எமது தாயகத்தில் எமது கட்டுப்பாட்டுப் பிர தேசங்களில் குறிப்பிட்ட சில பிரதேசங் களுக்குள் நுழைந்து கிளிநொச்சி நகருக்கு அண்மையில் சிங்கள அரச படைகள் நிலை கொண்டுள்ளன. எமது விடுதலைப் போரா ளிகளும் சிங்கள அரச படைகளை கிளி நொச்சிக்குள் நுழைய விடாமல் தாக்குதல் நடத்தி வரு[illegible]கின்றனர். அந்தத் தாக்குதலில், [illegible] அளவில் இழப் இராணுவத்தினர் [illegible]னால், புகளை சந்தித்து வருகின்றனர். [illegible] இலங்கை இராணுவத்தினர் விமானங்கள் மூலம் தமிழர்களின் குடியிருப்புகள் மீது கண்மூடித்தனமான குண்டு வீச்சுகளை நடத்துகின்றனர். அதில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான ஈழத்தமிழர்கள் உள்ளூரிலேயே தமது வாழ்விடங்களை விட்டுப் பாதுகாப் பான இடங்களைத் தேடி அகதிகளாக நகர்ந்த வண்ணம் உள்ளனர். ஆனால், கிளிநொச்சி யைப் பிடித்து விடுவோம் என்பது ராஜ பக்ஷவின் பகற்கனவு.

**கே:** இலங்கை இராணுவத்திற்கு பல் வேறு நாடுகள் உதவி செய்துவரும் நிலை யில், எந்த ஒரு நாட்டின் ஆதரவும் இல்லாத உங்களால் வெற்றி பெற்றுவிட முடியுமா?

**ப:** உலகத் தமிழ் மக்களின் ஆதரவு எம் பக்கம் உள்ளது. எமது மக்கள் முற்று முழு தாக எம்மோடு இணைந்து நிற்கிறார்கள். ஒரு இனத்தினுடைய விடுதலைப் போராட் டத்தில் மக்களின் ஆதரவும் பலமுமே முதன் மையானது. அதுதான் விடுதலைப் போராட் டத்தின் வெற்றிக்கு வழி வகுப்பதாகும்.

## கிளிநொச்சியைப் பிடித்து விடுவோம் என்பது ராஜபக்ஷவின் பகற்கனவு

அந்த வகையில், உலகத் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு தொடர்ந்து எங்களுக்கு கிடைத்து வருவதால்... இறுதி வெற்றி எங்களுக்குத்தான். அந்த வெற்றி... தமிழர் களின் வெற்றியாக இருக்கும்.

**கே:** போராளிகளின் எண்ணிக்கையை 3 ஆயிரமாக குறைத்து புலிகளைப் பலவீனப் படுத்தி விட்டோம் என்கிறதே இலங்கை இராணுவம்?

**ப:** எங்கள் மீது இராணுவம் நடத்தும் தாக்குதலில், சிங்கள இராணுவத்தினர் தான் இழப்புகளை அதிகம் சந்திக்கின்றனர். இந்த உண்மைகளை சிங்கள அரசு திட்ட மிட்டே மறைத்து வருகிறது. சிங்கள அரசின் சார்பு ஊடகங்களும் அதனைத்தான் செய்து வருகின்றன. அத்தகைய அரசு சார்பு ஊட கங்கள் வழியாக ஒரு பொய்ப்பிரசாரத்தை திட்டமிட்டே செய்து வருகிறார் அதிபர் ராஜபக்ஷ. எங்களுக்கு எதிரான ஒரு கருத் தோட்டத்தை உருவாக்கும் முயற்சிதான் அதிபர் ராஜபக்ஷவின் பொய்ப் பிரசாரம். எங்களின் இராணுவ வலிமை முன்னெப் போதும்போல் பலமாகவே இருக்கிறது.

**கே:** விமானக் குண்டுகள் மூலம் உங்க ளின் மறைவிடங்கள், புலிகளின் விமான ஓடுபாதை, சந்திக்கும் இரகசிய இடங்கள் ஆகியவற்றை அழித்துவிட்டதாகவும் சிங் கள இராணுவம் கூறி வருகிறதே?

**ப:** எங்களின் மறைவிடங்கள், விமான ஓடுபாதை எதையும் சிங்கள இராணுவத் தினரால் சேதப்படுத்தப் முடியாது. இரா ணுவத்தினரின் கண்மூடித்தனமான விமா னக் குண்டுவீச்சில் தமிழ் மக்களின் வாழ் விடங்கள், மருத்துவ மனைகள், கல்விச் சாலைகள், ஆலயங்கள் அழிக்கப்படுகின் றன. வளமானசெழிப்பான காடுகள் மீது குண்டுகளை வீசி இயற்கை வளங்களையும் அழித்து வருகிறது இராணுவம். தமிழீழத் தையும் தமிழ் இனத்தையும் அழிப்பதற்கா கவே, மக்களின் வாழ்விடங்களையும் இயற்கை வளங்களையும் அழித்துவிட்டு... எங்களின் மறைவிடங்களை அழித்துவிட்ட தாக பிரசாரம் செய்கிறது இராணுவம்.

**கே:** சமீபத்தில்கூட உங்கள் அரசியல் துறைத் தலைமை அலுவலகம் மீது தாக்கு தல் நடத்தப்பட்டதாகத் தெரிய வந்துள்ளதே, அப்போது நீங்கள் அங்கு இருந்தீர்களா?

**ப:** தாக்குதல் நடந்தது. ஆனால், எந்தச் சேதமும்? ஏற்படவில்லை. தாக்குதல் நடந்த போது நாங்கள் அங்கு இருக்கவில்லை.

**கே:** வடக்குப் பிரதேசத்தில் நீங்கள் பதில் தாக்குதல் எதையும் நடத்த முடியாத தற்கும் உங்களின் பலவீனத்திற்கும் கருணா இல்லாததுதான் காரணம் என்று தொடர்ந்து கூறப்பட்டு வருகிறதே?

**ப:** இயக்கத்திற்குத் துரோகம் இழைத் தவர் கருணா .அவரது துரோகத்தால் அவர் இயக்கத்திலிருந்து நிராகரிக்கப்பட்டவர். புலிகள் இயக்கம் எப்போது அவரை நிரா கரித்ததோ... அப்போதிலிருந்தே தமிழ் மக்களிடமிருந்தும் நிராகரிக்கப்பட்டவர். இயக் கத்திற்கும் தமிழ் மக்களுக்கும் இழைத்த துரோகத்தால், சிங்கள அரச படைகளின் ஒட்டுக் குழுவாக இயங்கி வருபவர். எமது மக்கள் முற்றுமுழுதாக அவரை நிராகரித்து விட்ட நிலையிலும், எமது மக்களின் முழுப் பலமும் எம்மோடு இருக்கின்ற நிலையி லும்... இந்தக் கேள்வியை முழுதாக மறுக் கின்றேன்.

**கே:** கருணாவை இலங்கை எம்.பி.யாக மகிந்த ராஜபக்ஷ நியமித்திருப்பது பற்றி?

**ப:** தமிழ் மக்கள் மீதான இன அழிப்புப் போரை நடத்திவரும் சிங்கள அரசு, உலக நாடுகளை ஏமாற்றி இராணுவ உதவிகளைப் பெறுவதற்காகவே கருணாவை ஒரு கருவி யாகப் பயன்படுத்தி வருகிறது. அதற்[illegible]காகத், துரோகி கருணாவிற்கு பதவி தந்துள்ளார் ராஜ பக்ஷ. தமிழ் மக்களின் உரிமைப் போராட் டத்திற்கு துரோகம் இழைத்ததற்காக, அடக்குமுறை அரசின் தலைவர் ராஜபக்ஷ வால் வழங்கப்பட்ட ஒரு ''கைக்கூலியா கவே அதனைப் பார்க்கின்றோம்.

**கே:** இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து ஆயுத உதவி அளித்து வருவதாக நீங்கள் குற்றஞ்சாட்டி வருகிறீர்கள்? எந்த அடிப் படையில் அதனை முன்வைக்கிறீர்கள்?

**ப:** இலங்கை இராணுவத்தினருக்கு ஆயு தத் தளபாடங்களை இந்தியா வழங்கி வரு வதாகவும் பயிற்சி அளிப்பதாகவும் பல் வேறு செய்தி ஊடகங்கள் பதிவு செய்துள் ளன. வவுனியா தளத்தில் ராடர் கருவியை இயக்குவதற்கான பயிற்சியை சிங்கள இரா ணுவத்தினருக்குக் கொடுக்க இந்திய தொழில்நுட்பவியல் வல்லுநர்கள் செயல் பட்டு வந்தனர் என்பதும் ஊடகங்கள் மூலம் உலகிற்கு அண்மையில் தெரியப்படுத்தப் பட்டது. அது எங்களுக்கு கவலையளிக்கிறது.

**கே:** இலங்கை அரசு மேற்கொண்டு வரும் யுத்தம் நீடிக்குமா? அல்லது மீண்டும் பேச்சு நடைபெறும் சூழல் உள்ளது என கருதுகிறீர்களா?

**ப:** ஸ்ரீ லங்கா அரசின் அரசியல், இராணுவ நிலைப்பாடுகளைப் பொறுத்தே அவ்வாறான சூழலை எதிர்பார்க்கலாம். ஆனால், கடந்த காலத்தில் நிலைநிறுத்தப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து அவர்களே தாமாக விலகியது மட்டுமல்லாமல் இராணுவத் தீர்வே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என தொடர்ச்சியாக சொல்லி வருகின்றனர்.

**கே:** இலங்கை இனப்பிரச்சினையில் எந்த மாதிரியான பங்களிப்பை இந்தியா செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள்?

**ப:** தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு எமது இயக்கத்தின் மீதான தடையை நீக்கி, எமக்கு ஆதரவு நல்கவேண்டுமென எதிர் பார்க்கிறோம்.

**கே:** சமீபத்தில் இலங்கை இராணுவத் தின் முன்னாள் துணைத் தளபதி ஜானக பெரேராவை உங்கள் இயக்கத்தின் தற் கொலைப்படை கொன்றுள்ளதே?

**ப:** அவ்வாறான சம்பவங்களின்போ தெல்லாம் எமது இயக்கத்தின் மீது குற் றம்சாட்டுவதையே வழமையான நடவடிக் கையாக வைத்திருக்கிறது சிங்கள இராணு வம். சிங்கள இராணுவத்தினருக்குள்ளேயே ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்ளும் அளவிற்கு முரண்பாடுகள் உள்ளன.

**கே:** ''தற்கொலைப்படைத் தாக்குதலை யும் அப்பாவி சிங்களவர்களையும் அழிக்கும் புலிகளை ஒடுக்க வேண்டிய தேவை எங்க ளுக்கு இருக்கிறது' என்று இந்தியாவிடம் இலங்கை அரசு கூறிவருகிறது. அந்தநிலை யில், தமிழர்களுக்குச் சாதகமான ஒரு பங்க ளிப்பை இந்தியாவிடம் புலிகள் எப்படி எதிர்பார்க்கலாம்? என்று இந்திய அரசியல் நோக்கர்கள் கூறுகிறார்களே?

**ப:** நாங்கள் ஒருபோதும் அப்பாவிச் சிங் களவர் மீது தாக்குதல் மேற்கொள்வதில்லை. தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடு கிற ஓர் விடுதலை இயக்கம் எங்களுடை யது. எந்தவொரு சாதாரண மக்களையும் கொல்வதால் பிரச்சினைக்கு தீர்வு எற்பட்டு விடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருப் பவர்கள். இந்திய அரசியல் நோக்கர்களும் கொள்கை வகுப்பாளர்களும் அதனை நன் றாகப் புரிந்துகொள்ள வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தி வருகின் றோம்.

**கே:** ''புலிகளின் தலைவர் பிரபாகரன் நீண்ட காலம் பதுங்கு குழியில் வாழ்ந்துவிட முடி யாது என்றும் அவர் சரணடைந்துவிட வேண்டுமென்றும்'' இலங்கை இராணுவம் எச்சரித்து வருகிறதே?

**ப:** பதுங்கு குழிகளில் வாழவில்லை. மக்களுடனேயே வாழ்ந்து, மக்களுக்காகப் போராடி எமது விடுதலைப் போராட்டத்தை வழிநடத்தி வருகிறோம். கடந்த 30 வருடங் களாக சிங்கள இராணுவம் அவ்வாறான வார்த்தைப் பிரயோகங்களை பிரயோகித்து வருவது வழமையான ஒன்று.

**கே:** தற்போதைய நெருக்கடியான களச் சூழலில் என்ன மனநிலையில் உள்ளீர்கள்?

**ப:** உறுதி தளராத நம்பிக்கையுடன் எமது விடுதலைப் போராட்டத்தை வழிநடத்திச் செல்லும் மனோ வல்லமையுடன் இருக்கி றோம். கடந்த 30 வருட விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து அவ்வாறான சந்தர்ப்பங்களை யெல்லாம் எமக்கு சாதகமாக மாற்றியுள் ளோம்.

எங்களது உறுதி தளராத மனநிலையைப் பற்றியும் தலைமைத்துவம் பற்றியும் இந் திய அமைதிப்படையின் இராணுவத் தள பதிகளாக இருந்தவர்களே பாராட்டி எழுதி யுளனர். எந்த நெருக்கடிகளிலும் உறுதி தளராத மனோதிடம் பெற்றுள்ளோம்.

**கே:** பிரபாகரன் வெளிநாட்டிற்கு அகதி யாகத் தப்பிச் செல்ல முயற்சிப்பதாக இலங்கை இராணுவம் கூறி வருவது பற்றி?

**ப:** வழமையான பொய்ப் பிரசாரத்தைத் தவிர வேறில்லை.

**கே:** பிரபாகரன் சரணடைந்தால் உயி ரோடு இந்தியாவிடம் ஒப்படைப்போம் என்கிறாரே ராஜபக்ஷ?

**ப:** ராஜபக்ஷவின் பல கனவுகளில் இது வும் ஒன்று.

**கே:** முப்பது வருடமாக நீடித்துவரும் இனப் பிரச்சினையில் தமிழகத்தின் பங்க ளிப்பு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்?

**ப:** எமது மக்களுக்கான விடுதலை கிடைக்கும்வரை தொடர்ச்சியான வழமை யான ஆதரவை நல்கி, எமது விடுதலைப் போராட்டத்திற்கு உலக அளவில் அங்கீகா ரம் கிடைப்பதற்கு செயல்பட வேண்டு மென்பது எங்களின் எதிர்பார்ப்பு.

**கே:** சர்வதேச நாடுகளுடனான புலிக ளின் தொடர்புகள் நீடிக்கின்றனவா?

**ப:** சமாதானப் பேச்சுகள் தொடர்பாக எங்களின் வழமையான தொடர்புகள் இருந்து வருகின்றன.

**கே:** இப்போதும் நீங்கள் தமிழீழக் கோரிக்கையைத் தான் ஒரு தீர்வாக முன் வைக்கிறீர்களா? அல்லது ஒரு குறைந்த பட்ச சுயாட்சிகொண்ட நிர்வாக அமைப்பா வது தீர்வாக இருக்கட்டும் என நினைக்கிறீ ர்களா?

**ப:** 1977 ஆம் ஆண்டு காலத்திலிருந்தே எமது மக்கள் தமது அரசியல் அபிலாஷை கள் என்னவென்பதை ஒவ்வொரு தேர்த லின் போதும் வெளிப்படுத்தியே வந்துள் ளனர். அதுதான் இனச்சிக்கல்களுக்கு நிரந் தரத் தீர்வாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி நிலைமை குறித்து தமிழ் ஊடகங்கள் பொய்ப்பிரசாரம் என்று ஜனாதிபதி சீற்றம்

கொழும்பு, ஒக்.22

வன்னியில் தற்போது முன்னெடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அங்குள்ள நிலைமைகள் குறித்து தமிழ் ஊடகங்கள் மிகைப்படுத்தித் தகவல்களை வெளியிடுகின்றன என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீற்றத்துடன் தெரிவித்திருக்கிறார்.

ஊடகநிறுவனங்களின் தலைவர்களுடன் நேற்றுக்காலை அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

''இடம்பெயர்ந்த மக்கள் குறித்து இலங்கை அரசு அக்கறை காட்டவில்லை என்ற பிழையான உணர்வு தமிழ் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இது உண்மைக்கு மாறானது'' - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளால் கொடுக்கப்படும் அழுத்தங்கள் தற்காலிகமானவை எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். மேலும் நாடாளுமன்றத்தில் உள்ள சகல எதிர்க்கட்சித் தலைவர்களையும் சந்தித்து நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாகத் தாம் கலந்துரையாடவுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

''வன்னியில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களின் எண்ணிக்கைகள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் பத்திரிகைகள் மூலம் வெளியாகும் பிழையான அறிக்கைகள் குறித்து நான் அறிந்துள்ளேன். உண்மையைத் தெரிவிக்க வேண்டாமென அந்த ஊடகங்கள் அழுத்தத்துக்குள்ளாகியுள்ளன'' என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

''வன்னியில் ஒரு லட்சத்து 5 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர். அவர்களுக்கு இரண்டு மாதங் களுக்குப் போது மான உணவு அனுப்பப்பட்டு விட்டது'' என்றும் ஜனாதிபதி சொன்னார்.



“இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவு வலுவாக உள்ளது. இந்தியா எமக்குத் தேவைப்பட்ட வேளைகளில் உதவியுள்ளது. இந்தியா தற்போது எதிர்கொண்டுள்ள அரசியல் அழுத்தங் களை நான் புரிந்துகொண்டுள்ளேன். குறிப்பாகக் கூட்டணி அரசியல் காரணமாக உருவாகும் நெருக்கடி எனக்குத் தெரியும், என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு இன்று

யாழ்ப்பாணம், ஒக்.22

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இயங்கும் முன்பள்ளிகளின் ஆசிரியைகளுக்கான கடந்த மூன்று மாத கொடுப்பனவு இன்று பி.ப. 1 மணிக்கு நகரசபையில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

போரூட் நிறுவனத்தினரால் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் முன்பள்ளி ஆசிரியைகளுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவாக மாதாந்தம் தலா ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஜூலை, ஒகஸ்ட், செப்ரெம்பர் ஆகிய மாதங்களுக்குரிய கொடுப்பனவே வழங்கப் படவுள்ளதாக நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார். (1-207)

# குடாநாட்டில் ஆகக் கூடுதலாக 90 நிமிடமே மின் தடை நடைமுறைக்கு!

## மின்சார சபை பிரதிப் பொது முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 22

குடாநாட்டில் தற்போது நடைமுறைப் படுத்தப்படும் மின் தடை ஆகக் கூடுதலாக 90 நிமிடங்களாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள மின் தடை தொடர்பாக கேட்டபோது மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் எஸ்.முத்துரட்ணானந்தன் இத் தகவலைத் தெரிவித்தார்.

புதிய நடைமுறைப்பிரகாரம் -

- யாழ். நகரப் பகுதியில் மாலை 5.50 மணிமுதல் மின்தடை அமுல் செய்யப்படும். அப்போது 50நிமிடங்கள் முதல் 60 நிமிடங்கள் வரை மின்தடை இருக்கும்.
- யாழ். நகரின் புறநகர்ப்பகுதிகளில் 75 நிமிடங்கள் முதல் 80 நிமிடங்கள் வரை மின்தடை இருக்கும். மாலை 5.50 மணிக்கு இத்தடை நடைமுறைக்கு வரும்.
- இந்த இரு பகுதிகளையும் தவிர்ந்த வடமராட்சி, தென்மராட்சி, சுன்னாகம், வட்டுக்கோட்டை, காங்கேசன் துறை ஆகிய பிரிவு களில் 70 நிமிடங்கள் முதல் 90 நிமிடங்கள் வரை மின்தடை அமுலில் இருக்கும். இந்தப்பகுதிகளில் சுழற்சி முறையில் மின் தடை நடைமுறை செய்யப்படும். மின்தடை நேரம் அந்தந்த நாள்களில் மாலையே முடிவு செய்யப்படும்.

சுன்னாகத்தில் தற்போது அமைக்கப் படும் ''வடக்கின் சக்தி ''(''North Power'') நிறுவனத்தின் மின்நிலையம் இயங்க ஆரம்பிக்கும் வரை மேலே குறிப்பிட்ட நேரங்களில் மின்தடை தொடர்ந்து அமுலில் இருக்கும் - என்று பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்தார். (அ-1)

## சுன்னாகம் சேமிப்பு வங்கியில் தன்னியக்க பணப் பரிமாற்ற இயந்திரம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22

சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியின் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திர (ATM) ஆரம்ப நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான தலைவரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபருமான செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (அ-1)

## இரவில் சைக்கிளில் சென்றவர் மீது சூடு

யாழ்ப்பாணம், ஒக்.22

கொடிகாமத்தில் கடந்த சனிக்கிழமை இரவு சைக்கிளில் சென்ற ஒருவர் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

மிருசுவில், ஆயத்தடியைச் சேர்ந்த செல்லையா விஜயரத்தினம் என்பவரே காயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகா[illegible] பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தனர். (அ-1-207)

## கொக்கட்டிச்சோலையில் 3 சிங்களவர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை அரசடித்தீவுப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இனந் தெரியாத நபர்களால் மூன்று சிங்கள இளைஞர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மூவரும் நீண்ட காலமாக மண் அகழ்வில் ஈடுபட்டு வந்தனர் என்றும் - அவர்கள் வீட்டில் இருந்த சமயம் அங்கு வந்த துப்பாக்கிதாரிகள் அவர்களை சுட்டுக்கொன்றனர் என்றும் - பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார். குளியாப்பிட்டிய மத்துகமவைச் சேர்ந்த சஞ்சீவ புஸ்பகுமார (வயது - 26) பன்னாலையைச் சேர்ந்த பிரியதர்ஷன (வயது - 23) மற்றும் றோசான் குமார (வயது - 24) ஆகியோரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர்கள்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தன. இச்சம்பவம் தொடர்பாக இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்துவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்திய நாடாளு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி நேரத்தை ரத்துச் செய்துவிட்டு விவாதம் நடத்துவதற்காக தமக்கு 5 நோட்டீஸ்கள் வந்துள்ளன என்றும் ஒவ்வொருவராக எழுந்து பேசுமாறும்சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார்.

ஆனால், அவரது கோரிக்கையை ஏற்க மறுத்த உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். அப்போது சபாநாயகர், ''நீங்கள்தான் என்னை இந்த நாற்காலியில் அமர வைத்தீர்கள். இப்போது நான் இங்கே இருக்கவிரும்பவில்லை'' - என்று கூறினார்.

எனினும், அமளி நீடித்ததால் மக்களவையை சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி நண்பகல் 12 மணி வரை ஒத்திவைத்தார். மாநிலங்களவையிலும் நேற்று இந்தப் பிரச்சினை காரணமாக அமளி ஏற்பட்டது.

தி.மு.கவைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர்கள், 'தமிழர்களைக் காப்பாற்றுங்கள்' 'இலங்கையில் இனப்படுகொலையை தடுத்து நிறுத்துங்கள்' என்று எழுதப்பட்ட பதாகைகளை கையில் பிடித்தபடி இலங்கைப் பிரச்சினை பற்றி விவாதிக்க வலியுறுத்தினர்.

இதனால், மாநிலங்களவையிலும் அமளி ஏற்பட்டது. இந்தப் பிரச்சினைகளை இன்னொரு சந்தர்ப்பத்தின்போது எழுப்புமாறும், இது பற்றி ஆரோக்கியமாக விவாதம் நடத்துமாறும் அவைத் தலைவர் ஹமீது அன்சாரி தொடர்ந்து வலியுறுத்தினார்.

ஆனால், உறுப்பினர்கள் தங்களது கோரிக்கைகளை தொடர்ந்து வலியுறுத்தியபடி இருந்தனர். இதனால், மாநிலங்களவையில் தொடர்ந்து 8 நிமிடத்திற்கு அமளி நிலவியது. இதையடுத்து, அவைத் தலைவர் ஹமீது அன்சாரி மாநிலங்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தார்.

**புறொயிலர்**

தீபாவளியை முன்னிட்டு விலை குறைக்கப்பட்டுள்ளது. 5Kg ற்கு மேல் விலைக் கழிவு உண்டு. [illegible]

[illegible]

முறிவு, [illegible] வைத்தியசாலைக்குக் கிழக்குப் பக்கமாக, நாயன்மார்கட்டு. (7940)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தி யோகத்தராக கடமை புரி யும் திருமதி அனன்சியற்றா மரிய சீலன் அவர்களின் அன்புத்தாய் திருமதி கஸ்மீர் திரவியம் மரியறோஸ் அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர்
நலன்புரிக் கூட்டுறவுச்சங்கம்.

## மரண அறிவித்தல்

### வைரமுத்து வடிவேல்

(முன்னாள் ஏகவிநியோகஸ்தர் லங்கெம் நிறுவனம், யாழ்ப்பாணம். முன்னாள் உரிமையாளர் வடிவேல் பிறதர்ஸ், நுவரெலியா, முன்னாள் உரிமையாளர் வடிவேல் அன் சன்ஸ், நவீனசந்தை, யாழ்ப்பாணம்)



சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் நுவரெலியா மற்றும் கம்பனை, சுழிபுரம் மத்தியை வசிப்பிடமாகவும் சிக்காக்கோவை (அமெரிக்கா) தற்போதைய வாழ்விடமாகவும் கொண்ட வைரமுத்து வடிவேல் நேற்று (21.10.2008) சிக்காக்கோவில் காலமானார்.

அன்னார் சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற வைரமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முருகேசு தம்பதியினரின் அன்பு மருமகனும், சின்னம்மாவின் (சிக்காக்கோ) அன்புக் கணவரும், ஜெயகுமாரி (நுவரெலியா), மன்மதகுமாரி (சிக்காக்கோ), வசந்தகுமாரி, வசந்தகுமார் (சிக்காக்கோ) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வரட்ணம் (நுவரெலியா), காலஞ்சென்ற மகேந்திரநாதன் (சிக்காக்கோ), கோணேசநாதன், வாகீஸ்வரி (சிக்காக்கோ) ஆகியோரின் அன்பு மாமனும், பிரதீபா, தீபிகா, தாரகா, சஜனன், கம்ஷானந்தி, முரளிநிமலன், விபூசன், வினோஜா, வினோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், சிதம்பரம் மற்றும் காலஞ்சென்ற இராமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.10.2008 சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் (அமெரிக்கா நேரம்) சிக்காக்கோவில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*37/5, சிவகுருநாதர் வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே.இல. 0212225291*

தகவல்:
திருமதி கோ.வசந்தகுமாரி (மகள்)
நு.கோணேசநாதன் (மருமகன்)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னம்மா சவரிமுத்து



அகஸ்ரின் ஒழுங்கை, இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சவரிமுத்து நேற்று (21.10.2008) இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அகஸ்ரின் பிள்ளை சவரிமுத்துவின் அன்பு மனைவியும், புஸ்பம் யோசப், காலம் சென்ற மேரிதிரேசா அந்தோனிப்பிள்ளை, F.X.அகஸ்ரின் (பொறியியலாளர்), J.K.கருணாகரன் (பொறியியலாளர்), காலஞ்சென்ற விக்டோரியா, J.M.மரியதாஸ் (பொறியியலாளர்), ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ் சென்ற அந்தோனிப்பிள்ளை யோசேப் (ஆசிரியர்), சூசைப் பிள்ளை அந்தோனிப்பிள்ளை, ஞானேஸ்வரி, பற்றிமா, மாலினி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற கேமன் யோசப் ஆகியோரின் சகோதரியும், ரீற்றா வில்லியத்தின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*அகஸ்ரின் ஒழுங்கை,*
*இளவாலை.*

தகவல்:
புஸ்பம் யோசப்(மகள்)
*0774212976*

### திருமதி புஸ்பராணி கமலசிங்கம்

நவிண்டில், கரணவாயைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இல, 50, சப்பல் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி கமலசிங்கம் நேற்று (21.10.2008) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா சுந்தரம்மா தம்பதிகளின் ஏக புத்திரியும், திரு.சின்னத்தம்பி கமலசிங்கத்தின் அன்பு மனைவியும், கமலினி(மார்பு நோய் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), செல்வி (மாவட்ட வைத்தியசாலை, மன்னார்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல:- 50, சப்பல் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சி.ஸ்ரீஸ்கந்தராசா(தம்பி)

### பொன்னம்பலம் அருமைநாயகம்

சித்திரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் அருமைநாயகம் நேற்று (21.10.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்பலம் - தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் கி.கேமலதா (சித்த ஆயுள்வேத வைத்தியர், மாநகர சபை), இ.இந்திரலதா (ஜேர்மனி), அ.தேவகாஞ்சன் (ஜேர்மனி), அ: வசந் ஆகியோரின் தந்தையும் இ.கிருபாகரன் (கமநல சேவை நிலயம், உடுவில்), தி.ரஞ்சித்குமார் (ஜேர்மனி), தே.காயத்திரி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் துஷானி, கோபிகா , மதுசன் (ஜேர்மனி), விதுஷன் (ஜேர்மனி), கஜானா (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும் சுப்பிமணியம், தட்சணாமூர்த்தி, மகேந்திரம் ஆகியோரின் சகோதரனும் சரஸ்வதி, அமரர் திருநாவுக்கரசு, சுந்தரலிங்கம் (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2008) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கமநல சேவை நிலையம்,*
*உடுவில்.*

*தகவல்:*
*இராஜரட்ணம்*
*கிருபாகரன்,*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# இலங்கையை ஆக்கிரமிக்க இந்திய அரசு தமிழகக் கட்சிகள் ஊடாக கபட நாடகம்

## ஜே.வி.பியின் கண்டுபிடிப்பு இது!

கொழும்பு, ஒக். 22

இலங்கையை யுத்த ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஆக்கிரமிக்கும் நோக்கில் இந்திய மத்திய அரசு தமிழ் நாட்டு அரசியல்வாதிகளின் ஊடாக சதித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது என்று ஜே.வி.பி. நேற்று நாடாளுமன்றில் கூறியது.

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக தமிழ் நாட்டு அரசியல் வாதிகள் நடத்திவரும் போராட்டங்கள் தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டு உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத்தே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

"இந்தியா இதுவரை இலங்கையைப் பொருளாதார ரீதியாக ஆக்கிரமித்து வந்தது. இப்போது யுத்த ரீதியாகவும் ஆக்கிரமிக்கத் திட்டமிட்டுள்ளது. புலிகளுக்கெதிராக மேற்கொள்ளப்படும் யுத்தம் மூலம் புலிகள் தோற்கடிக்கப்படுவதை விரும்பாத இந்தியா புலிகளைக் காப்பாற்றவும் அவர்களைப் பலமடையச் செய்யவும் முயற்சிக்கின்றது.

இந்த அடிப்படையில்தான் தமிழ் நாட்டு அரசியல்வாதிகளின் போராட்டம் அமைந்துள்ளது. இது இந்திய அரசின் திட்டமிட்ட நடவடிக்கையாகும்.

தமிழ் நாட்டு அரசியல்வாதிகளைப் பயன்படுத்தி இலங்கை விடயத்தில் மூக்கு நுழைக்க எடுக்கும் இந்தியாவின் முயற்சிக்கு இலங்கை அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். கடந்த காலங்களிலும் இந்தியா இவ்வாறு புலிகளைப் பாதுகாத்து புலிகள் தோல்வியின் விளிம்பில் இருந்த சந்தர்ப்பத்தில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கைக்குத் திணித்தும் இந்தியப் படையை இங்கு அழைத்து வந்தும் இந்தியா புலிகளைப் பாதுகாத்தது.

இலங்கையில் யுத்தத்தை நிறுத்த இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்காவிட்டால் எம்.பி. பதவிகளை ராஜிநாமாச் செய்யப்போவதாக தமிழ் நாட்டு எம்.பிக்கள் தெரிவித்துள்ளனர். இது வெறும் நாடகம் - என்றார்.

## மாகாணசபைகளிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நாடாளுமன்றில் சட்டமாக்குவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட தேசிய பொது வழிகள் சட்டமூலத்தின் ஊடாகவே மாகாண சபை அதிகாரங்களை மீளப்பெறும் நடவடிக்கையில் அரசு இறங்கியுள்ளது என்று அவர் கூறியதோடு இந்த முயற்சி நாட்டிற்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என பிரேமச்சந்திரன் அங்கு சொன்னார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:

13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நாட்டில் உள்ள மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீளப்பெற அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அந்த நோக்கத்தில் தான் தற்போது தேசிய பொது வழிகள் சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே போக்குவரத்து மற்றும் விவசாய சேவைகள் போன்றவை மாகாண சபைகளில் இருந்து மீளப் பெறப்பட்டு மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இன்னும் பல அதிகாரங்களையும் இவ்வாறு மீளப்பெற அரசு முயற்சிக்கிறது. இது நாட்டில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இவ்வாறு அதிகாரங்களை மீளப்பெறுவதாகவிருந் தால் எதற்கு இந்த 13 ஆவது திருத்தச் சட்டம்? இதைக் கிழித்து வீச வேண்டியதுதானே?

நாட்டை மிக மோசமாகப் பாதிக்கக் கூடிய இந்த நடவடிக்கையை அரசு உடன் கைவிட வேண்டும். தேசிய கொள்கை உருவாக்கம் என்ற பெயரின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. - என்றார்.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீளப் பெறும் நடவடிக்கைகள் எவற்றிலும் அரசு ஈடுபடவில்லை என்று அமைச்சர் டி.பி.எக்கநாயக்க கூறினார். (அ-சி)

## யுத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கையில் யுத்தத்தை நிறுத்த இந்தியா மற்றும் வாஷிங்டன் நிர்ப்பந்தம் உள்ளதா என்று சபையில் விமல் வீரவன்ஸவும் விஜித ஹேரத்தும் கேள்வி எழுப்பினர். "அவ்வாறான நிர்ப்பந்தங்கள் எவையும் இதுவரை இல்லை என்பதே எமது பதில்."

இலங்கைப் பிரச்சினை தொடர்பாகத் தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் போராட்டங்கள் நடத்துகின்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு யுத்தம் தொடர்பாகவும் எமது நாட்டு அகதிகள் தொடர்பாகவும் நாம் கொண்டிருக்கும் நிலைப்பாட்டை விளக்கினார்.

இலங்கை யுத்தம் தொடர்பாக இந்திய அரசு ஒரு தெளிவான நிலைப்பாட்டில் உள்ளது.

இலங்கையில் புலிகளை நிராயுதபாணிகளாக்கி பயங்கரவாதத்தை முற்றாகத் தோற்கடித்து உரிய அரசியல் தீர்வை முன்வைப்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம் என்பதை மஹிந்த ராஜபக்ஷ இந்தியா பிரதமருக்குக் கூறிவைத்தார்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்த அகதிகளின் நலனில் அரசு அதிக அக்கறை எடுத்துள்ளது. இந்த மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை அரசு வழங்கி வருகின்றது.

இந்தச் செயற்பாடு தொடர்பாகவும் மஹிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமருக்கு விரிவாக விளங்கியுள்ளார்.

இந்தியா ஒரு போதும் இலங்கையில் இடம்பெறும் யுத்தத்தை நிறுத்துமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவில்லை.

இலங்கையின் இறைமையைப் பாதுகாக்கும் வகையில் அதிகளவில் செயற்படும் நாடு என்றால் அது இந்தியா மட்டும்தான்.

தமிழ் நாட்டு அரசு கூட புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படவில்லை. இராமேஸ்வரத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் புலிகளின் கொடியை ஏற்ற சிலர் முயற்சி எடுத்த போது தமிழ் நாட்டுப் பொலிஸார் அதைத் தடுத்து விட்டனர்.

இதன் மூலம் தமிழ் நாட்டுஅரசு புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படவில்லை என்பது தெரிகிறது.

ஆகவே, இலங்கையில் இடம்பெறும் யுத்தத்தை நிறுத்துமாறு இந்தியாவோ அல்லது வேறெந்த நாடுகளோ எமக்கு அழுத்தம் கொடுக்கவில்லை என்பதை நாம் மிகத் தெளிவாகத் தெரிவிக்கின்றோம் - என்றார். (அ-சி)

## புலமைப்பரிசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கையை ஒட்டி இடம் பெற்ற குளறுபடிகள், இறுதிநேர அவசர நடவடிக்கைகள் காரணமாக யாழ்.மாவட்டப் பரீட்சார்த்திகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சை விடைத்தாள்களைப் பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே திருத்தவேண்டும். ஆனால், அதில் புலமைத்துவம் இல்லாத பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு இந்த விடைத் தாள்கள் திருத்தப்பட்டிருக்கின்றன. அதிலும் அளவுக்கு மீறிய அவசரங்களும் கவனமின்மையும் காட்டப்பட்டுள்ளன.

இந்தப் பின்னணியில் யாழ். மாவட்டத்தில் குறைந்தது 265 மாணவர்கள் வரை நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் உட்பட கல்விச் சமூகத்தினர் கருதுகின்றனர்.

இத்தகைய மாணவர்களின் விடைத்தாள் மதிப்பீட்டை மீளாய்வு செய்யுமாறு பாடசாலை அதிபர்கள் விடுத்த கோரிக்கையை பரீட்சை ஆணையாளர் நாயகம் நிராகரித்துள்ளார். மீளாய்வு செய்ய அனுமதி இல்லை என அவர் எழுத்தில் பதிலளித்துள்ளார்.

எனவே, இந்த விடயத்தை விசாரித்துப் பாதிப்புற்ற மாணவர்களுக்கு நிவாரணம் பெற்றுத் தரவும், மாணவர்களின் விடைத்தாள்களை மீளாய்வு செய்ய விண்ணப்பிக்கப்பட்டால், அவற்றை மீளாய்வு செய்யும்படி பரீட்சைத் திணைக்களத்துக்கு உத்தரவிடவும் நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இப்படி அந்த மனுவில் மேலும் கோரப்பட்டுள்ளது.

மேற்படி புலமைப் பரிசில் பரீட்சை மதிப்பீட்டுப் பணியால் பாதிக்கப்பட்ட யாழ். மாணவர்களின் பெற்றோர்கள் தமக்குள் ஓர் அமைப்பை உருவாக்கி அதன் ஊடாக இந்த வழக்கைத் தாக்கல் செய்வதற்கான முன் நடவடிக்கைகளை எடுத்தனர் என்று கூறப்படுகின்றது.

மேற்படி மனுவை சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.சுமந்திரன், சட்டத்தரணி ஹம்ஸனா வாமதேவன் ஆகியோரின் வழிகாட்டலில் சட்டத்தரணி மோகன் பாலேந்திரா தாக்கல் செய்தார். (சி)


## வெளிவந்து விட்டது

O/L 2008 ENGLISH MEDIUM
MODEL PAPER
பனரச வெளியீடு (ORIGINAL)
MATHS, SCIENCE, HISTORY,
ENGLISH, TAMIL
விலை 595/=

அன்னை புத்தகசாலை
பஸ் நிலையம் அருகில்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,222 3881


## நுணாவிலில் பொலிஸ் கான்ஸ்டபிள் இரவில் சுட்டுக் கொல்லப்பட்டார்

யாழ்ப்பாணம், ஒக். 22

சாவகச்சேரி நுணாவில் கிழக்கில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 11மணியளவில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார்.

ஈ.பி.டி.பி. அமைப்பின் தென்மராட்சி அலுவலகத்தில் பணியில் இருந்த ரவீந்திரா என்ற கான்ஸ்டபிளே உயிரிழந்தவர் ஆவார்.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸாரால் நேற்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து நீதிவான் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலத்தை பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவையில் பரபரப்பு ஏற்பட்டது.

கேள்வி நேரத்தை ரத்துச் செய்துவிட்டு விவாதம் நடத்துவதற்காக தமக்கு 5 நோட்டீஸ்கள் வந்துள்ளன என்றும் ஒவ்வொருவராக எழுந்து பேசுமாறும்சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்.

ஆனால், அவரது கோரிக்கையை ஏற்க மறுத்த உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். அப்போது சபாநாயகர், "நீங்கள்தான் என்னை இந்த நாற்காலியில் அமர வைத்தீர்கள். இப்போது நான் இங்கே இருக்கவிரும்பவில்லை" - என்று கூறினார்.

எனினும், அமளி நீடித்ததால் மக்களவையை சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி நண்பகல் 12 மணி வரை ஒத்திவைத்தார். மாநிலங்களவையிலும் நேற்று இந்தப் பிரச்சினை காரணமாக அமளி ஏற்பட்டது.

தி.மு.கவைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர்கள், 'தமிழர்களைக் காப்பாற்றுங்கள்' 'இலங்கையில் இனப்படுகொலையை தடுத்து நிறுத்துங்கள்' என்று எழுதப்பட்ட பதாகைகளை கையில் பிடித்தபடி இலங்கைப் பிரச்சினை பற்றி விவாதிக்க வலியுறுத்தினர்.

இதனால், மாநிலங்களவையிலும் அமளி ஏற்பட்டது. இந்தப் பிரச்சினைகளை இன்னொரு சந்தர்ப்பத்தின்போது எழுப்புமாறும், இது பற்றி ஆரோக்கியமாக விவாதம் நடத்துமாறும் அவைத் தலைவர் ஹமீது அன்சாரி தொடர்ந்து வலியுறுத்தினார்.

ஆனால், உறுப்பினர்கள் தங்களது கோரிக்கைகளை தொடர்ந்து வலியுறுத்தியபடி இருந்தனர். இதனால், மாநிலங்களவையில் தொடர்ந்து 8 நிமிடத்திற்கு அமளி நிலவியது. இதையடுத்து, அவைத் தலைவர் ஹமீது அன்சாரி மாநிலங்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்தி வைக்கப்படுவதாக அறிவித்தார்.

## தமிழகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் நேற்று தி.மு.க. சார்பில் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் பா.ம.க. உள்ளிட்ட கட்சிகள் பங்கேற்கப்போவதாக அறிவித்திருந்தன.

இந்த நிலையில் வங்கக் கடலில் உருவாகியுள்ள புயல் காரணமாக தமிழகத்தில் பலத்த மழை பெய்து வருவதால் இந்த மனிதச் சங்கிலிப் போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## தமிழகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன என்று ஜோஸப் மைக்கல் பெரேரா கேள்வி எழுப்பினார்.

இவரைத் தொடர்ந்து ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத்தும் அவரைத் தொடர்ந்து தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸவும் தமிழ் நாட்டு அரசியல் கட்சிப் போராட்டங்கள் தொடர்பாக அறிக்கைகளை வெளியிட்டு உரையாற்றினர்.

அவர்கள் தங்களது உரையில் இந்திய அரசைக் கடுமையாகச் சாடினர். இலங்கை அரசையும் மிக மோசமாக விமர்சித்தனர்.

இவர்களின் கூற்றைத் தொடர்ந்து அக்கூற்றுக்கு வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம பதிலளித்தார். யுத்தத்தை நிறுத்துமாறு இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவில்லை என்றார்.

அப்போது விமல் வீரவன்ஸ எழுந்து அரச தரப்பைச் சேர்ந்த அமைச்சரான சந்திரசேகரன் யுத்தத்திற்கு எதிரான தமிழ் நாட்டு அரசியல்வாதிகளின் போராட்டங்களை ஆதரித்துள்ளார் என்று கூறினார்.

அரசிற்குள் இப்படி இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் இருக்கும் போது அரசால் எப்படி யுத்தத்தைத் தொடர முடியும் என்று விமல் கேள்வி எழுப்பினார்.

சம்பந்தப்பட்ட அமைச்சர் இன்று சபைக்கு வரவில்லை. அவர் வந்ததும் அவரிடமே இந்த கேள்வியைக் கேளுங்கள் என்று அமைச்சர் ரோஹித போகொல்லாகம பதிலளித்தார்.

இதேவேளை இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கை வரவுள்ளார் ,என்று தெரிவிக்கப்படுகிறது. எப்போது வருவார் என்று ஐ.தே.கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பினார்.

'பிரணாப் முஹர்ஜியின் வருகை குறித்து நீங்கள் கலவரமடையத் தேவையில்லை' - என்று அமைச்சர் ரோஹித பதிலளித்தார்.

அப்போது குறுக்கீடு செய்த ஐ.தே. கட்சி எம்.பி ஜோன் அமரதுங்க 'பஸில் ராஜபக்ஷ இந்திய பயணமாகியுள்ளார். கோத்தபாய பாகிஸ்தான் செல்லத் திட்டமிட்டுள்ளார். இது என்ன நாடகம்' என்று கேட்டார்.

இது தொடர்பாக செய்தி வெளியிட்டிருக்கும் ஊடகத்திடமே நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டும் என்று ரோஹித பதிலளித்தார். இந்தச் சர்ச்சை நீண்ட நேரமாக சபை யில் இடம்பெற்றது. (அ-சி)


II Interview?
II Promotion?
II Migration?




உங்கள் சான்றிதழ் அரச/ சர்வதேச அங்கீகாரம் மிக்கதா?

ICDL
International Computer Driving Licence

Note: இவ்வாண்டு இச்சான்றிதழைப் பெறும் முதல் 1000 பேரிற்கு இலங்கை அரசாங்கத்தினால் பரீட்சைக் கட்டணம் மீளவழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

Testing Centre
STP Your Partner in IT Solution
No:149, Kasthuriar Road, Jaffna, T.P. 2222674 Fx: 2228147 web: www.icdl.com


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org